சிட்டம்கடுகுரோகணியுஞ்சேருமிருவேல்விலாமிச்சு
வட்டமிகுநச்சந்தனமும்வகையோரொன்றுகழஞ்சியதாய்த்
திட்டமாகவரைத்தெடுத்துச்செய்யமெழுகுபதம்வடித்து
நட்டமுடனேபூசிடிலேநல்லோவாதசுரம்போமே ௮௮

பித்தசுரத்தெண்ணெய்

நல்லோர்புகழுஞ்சீதேவிநல்லசெங்கழுநீர்சலமுடனே
சொல்லுமிதமோர்தாமரையும்துய்யசீந்தில்சிற்றாமுட்டி
வல்லமருந்துவெவ்வேறேவகையாய்த்துவைத்துநாழிகொண்டு
எல்லோர்விரும்புமெள்ளெண்ணெய்தாவும்நாழியொக்கவிட. ௮௯

ஒக்கவிடவேநன்னாரியுசவுமிருவேல்விலாமிச்சு
மிக்கமுத்தக்காசுடனேமேவுநற்றாமரைவளையம்
தக்கமருந்தவரைத்தெடுத்துச்சரியாய்மெழுகுபதம்வடித்து
சிக்கென்றெடுத்துச்சிரசில்வைக்கத்தீராச்சுரம்போம்பொன்னனே.(

பயித்தியத்துக்கு எண்ணெய்

பொன்னாங்காணிமுசுமுசுக்கைபுகழுஞ்சாத்தாவரிசீந்தில்
நன்னேர்சாறுமொவ்வொன்றுநயமாய்நாழியொன்றாக்கி
பின்னேமுலைப்பாலும்நாழிவிரும்புமெண்ணெயறுநாழி
சொன்னேமதுரமெண்கழஞ்சுசுகமாயரைத்துக்கரைத்திடவே. ()

கரைத்தேயெடுத்துக்காய்ச்சியதைக்கடுகுமெழுகுபதம் வடித்துச்
சிரத்தேபூசியுட்கொள்ளத்தீராப்பித்தம்பயித்தியம்போம்
உரத்தேபகட்டிக்கணமருட்டியுறுபற்கடித்துநோக்குகின்ற
வரத்தால்வந்தவெரிபித்தமாறும்கண்டாய்நற்றவமே ௯௨

சன்னிவாதசுரத்தெண்ணெய்.

நற்றசூரிவிலாமிச்சுநாருக்கரந்தைசிவன்வேம்பு
சிற்றாமுட்டிபெருங்குமிழுஞ்சேருங்குதிரைவாலியின்வேர்

பற்றேமருந் துலைவ்வொன்றுபகரும்பலந்தானெந்துகொள்ளு
உற்றேயிடித்துஒன்ருக்கியுதகமாக்காலாறுவிடே. ௲௬௱

ஆறுமாக்கால்தண்ணீருமடைவாய்க்காய்ச்சிச்சரியாக
தேறும்படியேகோதுதள்ளிதெளிவேப்பெண்ணெய்நாழிவிட்டுக்
கூறும்கோஷ்டஞ்சண்பகப்பூகுலவுமேலமைதிமதுரம்
மீறும்லவங்கம்வசவாசிமிக்ககிராம்புதிப்பிலியே ௲௬௪

மிக்கவரத்தைதேவதாரமேவும்கடுகுரோகணியும்
சுக்குகடுகுசதகுப்பைதிய்யஇந்துசெவ்வள்ளி
தக்கமிளகுசெவ்வியமரான்றிகடுக்காய்நெல்லியுடன்
ஒக்ககருஞ்சீர்நற்சீர்முதவும்வெட்பாலரிசிகொள்வோ ௲௬௫

உதவுஞ்சன்னிநாராயனுற்றபருப்புவிரைதேடும்
விதமாம்வெளுததபிசினுடனே மேவுஞ்சாக்கோர்கழஞ்சு கொண்டு
இதமாயரைத்துக்கியாழமதிலெடுத்தேகாய்ச்சிமெழுகினிட
பதமாய்வடித்துவுட்கொண்டுபகருஞ்சிரசுமேற்பூசே ௲௬௬

பூசிப்பிறகுமூன்றுநாள்புனலைக்காய்ச்சிமுழுகியபின்
வீசும்கைகால்திமிர்விரைத்தல்மெத்தநடுக்கல்மெய்நோகல்
பேசுநாக்குத்திமிர்விரைத்தல்பெருத்தமேனிவயக்கேடும்
தோஷமூன்றினுலெடுத்தசுரமுஞ்சன்னியிருட்சியும்போம் ௲௬௭

நாள்மாறலுக் கெண்ணெய்

இருவேலிவிலாமிச்சுமுத்தக்காசுஇசைந்தநன்னர்வேருடனேபின்னும்கேளு,மருமேவுஞ்சீதேவிசெங்கழுநீர்வளரோரிலைத்தாமரைவேர்வகையதாகத்,திருமேவும்பலமூன்றுமாகக்கூட்டிச்சேர்த்திடித்துநீர்விட்டுநாலொன்ருக்கி,உருமேவுநல்லெண்ணெய்நாழிவிட்டுவுவ்வியதோரிலவங்கமதுரம்கூட்டே. ௲௬௮

கூட்டியதோர்தேவதாரமேலம்கோஷ்டம்
குறையாதசந்தனமும்வசுவாசோடு
நாட்டியதோர்சண்பகப்பூகிராம்புதேடி
நயமாகவோரொன்றுகழஞ்சதாக
மீட்டுமிதையரைத்தெடுத்துக்கியாழத்தூற்றி
மெழுகுபதந்தான்வடித்துமெய்யிற்பூசி
ஈட்டமுள்ளசிரமதிலேபொருந்தி
யிருநீர்தான்புடாமலின்னமுழுகுகுவீரே ௲௬௯

வேறு.

முழுகுவீர்மூன்றுநாளுமுலைக்குஞ்சுக்குநீர்குடியும்
கழுவியமுசுமுசுக்கைகலந்தவெற்றிலையும்கூட்டி

வழுவியபர்தநீரைமறுபடியுமேயாய்வைத்து
பழகுசோறவியதுண்ணப் பறந்திடுஞ்சுரமிதாமே ௩௫

சன்னிவாதசுரத்திலெண்ணெய்.

சூரன்முறிபங்கம்பாளை தோன்றிடும்விழிதன்னூர்
பெருமருந்தியாரின்பூறல் பின்னிடயீசன்வேம்பு
இருமைசேருருக்குத்தோடை யிலாமிச்சையிணைசேர்வெள்வேல்
முருகனாயுருவிசித்தாமணக்குடன்முத்தக்காசே எாக

காசகல்சிரந்திதன்னி காசகன்குதிரைவாலி
வீசிறுவேலிப்பருத்தி வெங்கொடிவேலிதானும்
மாசறுமூலந்துராய்பொன் மலர்செப்புநெரிஞ்சிலோடு
சுசுரர்நருள்செய்வோ மினிகடைமருந்துசொல்வாம் எாஉ

வேறு.

சொல்லுங்கச்சோலப்ச்சிலை சுக்குமிளகுகொத்தமல்லி
செல்லுஞ்சிறுமூலகைமேலஞ் செவ்வியந்தேவதாரமுடன்
நல்லகோஷ்டமாமஞ்சள் நாடமாஞ்சில்திப்பிலியே
வல்லசீரகம்சனிநாயன் வளாவேல்பிசினுந்தேடீரே எாங

தேடியவசம்பரத்தை சேர்தலவங்கம்குப்பை
கூடியமருந்தோடொன்று கழஞ்சிநீர்கூட்டியெண்ணெய்
ஏடவிழெருக்கன்வேர்சா றெலுமிச்சம்புளிகார்பாசம்
ஓடுசேரிலையின்சாறு வொன்றொன்றுநாழிகொள்ளே எாச

கொண்டதோர்பொழுத்தில்முன் கூறியமருந்தேயெல்லாம்
பண்டுபோல்கரைத்துக்காய்சசி பதத்தினில்வடித்துயெண்ணெய்
உண்டிடமேலேபூச வுச்சியில்தடவக்கோட்டி
கொண்டிடுஞ்சன்னிவாதஞ் சுரங்குலைந்தோடுமென்றே எாரு

நயனத்தில்பலதோஷம்பற்றிலெண்ணெய்-வேறு.

மருவியதோர்நயனமதில்தோஷத்துக்கு
வள்ரெண்ணெய்பேராமட்டிசித்தாமட்டி
இருவேலிநீர்ப்பூலாமுத்தக்காசு
இசைந்தசீந்தில்கிழங்குபொன்னாங்காணி
திருமேவும்நன்னாரிகுதிரைவாலி
செப்பரியநிலக்குமிழ்வேர்நீரின்முள்ளி
தருமேவுமோரிதழின்றுமனையுங்
தக்கபசளைக்கிழங்குசாத்தாவாரி எாசு

சாற்றியதோர்பனங்கருக்குவிளாமிச்சம்வேர்
 சந்தனந்தாமரைக்கிழங்குசரியதாக
தேற்றமிருகடைமருந்துசெண்பகப்பூ
 செவ்வள்ளிக்கிளிபூரல்நாகப்பூவும்
மாற்றரியமலேயிருவேல்கொத்தமல்லி
 வசுவாசிசாதிக்காலவங்கமேலம்
ஏற்றமுள்ளகைச்சோலங்கொழுந்துபச்சை
 யியல்கோஷ்டமதிமதுரமின்னங்கேளே ௪௱௩௭

இன்னங்கேள்குங்குமத்தின்பட்டைகூட்டி
 இயல்கருஞ்சீர்கிராம்புடனேகுங்குமப்பூ
சொன்னேன்கேள்கடைமருந்துகழஞ்சிகூட்டி
 துப்பவேரிருகழஞ்சுசுகமதாக
பொன்னேகேள்நெல்லிகாய்சாறுநாழி
 புளகமுறும்நல்லெண்ணெய்முன்னுழிகூட்டி
மின்னூரேநறுநெய்முன்னுழிகொண்டு
 மேவியதாமனாக்கிழங்குவிரும்புவீரே ௪௱௩௮

விரும்பியேசாத்தாவாரிகிழங்குதன்னில்
 மெல்லியரேதாமரையின்கிழங்குதன்னில்
தரும்படியேயொவ்வொன்றுநாழிகொண்டு
 சந்தனமும்மைங்கழஞ்சுசரியதாக
விரும்பியதோர்கியாழமதிலெண்ணெய்நெய்யும்
 விட்டுநீர்மெழுகுபதம்வடித்தேகொண்டு
திரும்பியதோர்தாலம்பூபுனுகுபச்சை
 செய்யகற்பூரங்கழஞ்சுசிறக்கத்தேடே ௪௱௩௯

தேடியதோரெண்ணெய்தனையுள்ளேபோட்டு
 திடனாகக்கட்டிவைத்துச்சிரசில்பூசி
நீடினதோர்கண்ணிலுள்ளவியாதியெல்லாம்
 நிறங்குளிர்ந்துதலைகுளிரும்நித்தநித்தம்
கூடியதோரிந்தயெண்ணெயுள்ளங்காலில்
 குறிப்புடனேதான்பூசுங்கோதைமானே
பாடியதோர்சிவனார்தன்பாதத்தாணை
 பறந்துவிடும்விழிநோய்கள்கலைவல்லோரே ௪௱௪௰

மகோதரமுதலானவிக்கத்திற்குக்கும்மட்டிக்குழம்பு.

வல்லஆடுதின்னுப்பாளைவழங்குங்குப்பைமேனியுடன்
சொல்லும்பேய்ப்பாறசொற்றியுடன்சொரிகாஞ்சொண்டி நீல்வாகை
நல்லகையாந்தகரையுட னுடுங்கோழியவரையிலை
இல்லம்பெரியகும்மட்டி யிந்தசாறுமிவைகளெல்லாம் ௪௱௪௧

இந்தச்சாறுந்தனியாக விதுவேயொன்றாய்க்கூட்டியபின்
சுந்தரஞ்சோறுதின்னத் துய்யவிலைச்சாறென்றனையாம்
விந்தைசெறியுந்தேசிக்காய் மிக்கவேறாறுபிழிந்தூவிட்டு
சுந்தங்கம்பூங்கடைமருந்தும் கடியவிதாஞ்சாதிலிங்கம் ௭௱௰௨

கடியகருஞ்சீர்மனோசிலையுங் கடலினுரையுஞ்சீரகமும்
துடிகொள்மல்லிதிப்பிலியுஞ் சோமனுப்புயதிமதுரங்
கொடியவுள்ளிபேய்கடுக்காய் கூட்டியனைத்துக்கியாழமதில்
வடியக்காய்ச்சிவருகையிலே மறுகால்ரும்புகிட்டமெடே ௭௱௰௩

கிட்டமிடித்துப்பொடிகழஞ்சு கிளருமரிசிமாப்பிடியாம்
தொட்டுத்தூவிக்குழம்பாகத் தூதுளங்காய்ப்பிரமாணம்
கட்டும்வீக்கமெடுத்தவர்க்குக் காலமந்தியொருவுண்டை
இட்டுக்கொள்ளவல்லீரா பேகும்வீக்கமாறிடுமே ௭௱௰௪

கருங்கோழிபற்பம்.

புறு முப்புப்புளிவைவிடு மறுகால்முருங்கையிலைகூடு
முறுங்கோழிமுட்டையுமாங் கொள்ளுமுருங்கைக்காயுடனே
தீறும்படியேதின்பீரா யுடம்புவற்றிநீரிருக்கும்
தேறும்வீக்கமகோதரமுஞ் சிதைந்துவோடுஞ்சாரணையே ௭௱௰௫

சாரணைக்கிழங்குகொடிவேலி தக்கமுருகன்கிழங்குடனே
கூறுமுருங்கைப்பிளிகடலை கொள்ளுமியங்கும்யப்பையுடன்
மீறுஞ்சத்திசாரணையு மிக்ககுரோட்டைசிறுகுறட்டை
தேறும்படியேயிவையெல்லாஞ் சேர்த்துநறுக்கியொன்றாகவே ()

ஒண்ணும்வெள்ளாட்டெருமையுட னுதவும்பசுவின் கோமியந்தான்
நண்ணவெடுத்துத்தனித்தனியேநல்குமருந்துதானவித்து
மண்ணோர்புகழவெய்யில்வைத்து மாய்போவுலர்த்திமாவாக்கி
பெண்ணேகேளீர்கடைமருந்து பெரியகாயமிந்துப்பே ௭௱௰௭

இந்துசுக்குசிற்றாத்தை யிணங்குமிளகுந்திப்பிலியுங்
கந்தங்கமழும்பேராத்தை கடியரோணிகடுகதுவும்
மூந்துமுனிவாநோர்வாள முதியவசம்புயிலவங்கம்
விந்தமநற்சீர்சதகுப்பை விளங்குமோதந்தேடிடுமே ௭௱௰௮

தேடுங்கள்ளிப்பாலதனில் செய்யசாக்குத்தான்போட்டு
கூடும்படியேவைத்தோடு குல்வுமதனைப்பொடியாக்கி
நாடுங்கரியகோழியது நல்லதாகஅறுத்தரித்து
வாடுஞ்சதைப்பிளகதுபோல் வணைந்துகோமியம்வார்த்தவிடே ()

வார்த்தேயவித்துவைத்தெடுத்து வழங்குஞ்சாக்குப்பொடிதூவி
சேர்த்தேபிசைந்துநல்லெண்ணெய் தெரியும்நாழிகூடவிட்டு
பார்த்தேமெழுகுபதந்தனிலே பையப்பிறக்கிப்பாறவைத்து
கூத்தாங்களியின்பாக்களவு கொண்டேவெந்நீர்குடித்திடுமே ௭௨௰

குடித்திடும்போதுதானுங் குடிபோம்வியாதிபேர்கேளும்
எடுத்தசத்திகுன்மமுடன் எரியுங்குன்மம்வலிகுன்மம்
தொடுத்தவயிற்றுவியாதிகளுந் துயர்மேற்கவிசைபக்கவிசை
படுத்தவாதகுண்டலிப்புப் பறக்கும்வயிற்றுநோய்வல்லியரே ௭௨௧

ஒக்காளஞ்சத்திமறிக்க.

வல்லியிளநீர்வெத்தெடுத்து வாகாய்மதாஞ்சந்தனமும்
சொல்லும்பொரியுமாந்துளிருஞ் சேவணைத்தூளொன்றாக்கி
நல்லயிளநீர்தனிற்கொடுக்க நாடாதேகேள்சத்திகளுங்
கொல்லுமோக்காளமுதலாய்க் குடிபோமென்றார்சுகசிதுவே ௭௨௨

சுக்குமிளகுந்திப்பிலியுந் துய்யகடுக்காய்மாங்கொட்டை
தக்ககிராம்புவசுவாசி சாதிக்காயம்அதிவிடையம்
மிக்கஇந்துமாம்பட்டை மேவுமோதமுள்ளியொடு
ஒக்ககநஞ்சீர்நற்சீர முதவும்பெரியகாய்முமே ௭௨௩

உதவுமத்திக்காய்ப்பிஞ்சு வுற்றமாதுவளம்பிஞ்சு
விதமாமிலவம்பிஞ்சுடனே வில்வம்பிஞ்சுமுத்தக்காய்
சிதமாம்புளியங்கொட்டைத்தோலேடுக்கும்பங்கம்பாளையின்வேர்
பதமாய்நீருங்கழஞ்சுகொண்டு பரிவாய்ப்புடமிட்டரைத்திடுமே ()

பரிவாய்ப்புடமிட்டரைத்தெடுத்துப் பகருஞ்சிலைவடிகொண்டு
விரிவாய்வெருகடிதான்கொள்ள மேவுங்கழிச்சலுள்ளதெல்லாம்
சரியாய்மாறும்வாழைப்பூ தக்கவாழைக்காயுமாம்
பெரியோருரைத்தமருந்திதுகாண் பேணிக்கொள்ளுமுலகோரே ()

பேணுங்கஞ்சாப்பொடியிரண்டும் பெருகுமுத்தக்காசுவொன்று
காணுங்காய்ச்சுகட்டியொன்று கடியபுளியந்தோலொன்று
நாணுமோதமிவையொன்று நல்லமீத்திலைச்சாறும்
தோணுமொககவார்த்தரைத்து தூதுளங்காயளவுண்டை ௭௨௬

அளவேவெண்ணெய்தனிலிட்டா லானகிராணியுபத்திரம்போம்
பளருங்வாழைப்பூச்சாற்றில் பதிவாயிட்டால் பித்தம்போம்
மிளகுசுக்கில்தானருந்த மிக்கசுரமுந்தீர்ந்திடுமே
விளையுங்கிராணியிகத்திரு மேவுமேழுநாள்கொளுமே ௭௨௭

கொள்ளுந்தயிரில்கழிச்சலுக்கு கூறுமூன்றுநாட்கொளுமே
விள்ளுமிதற்குப்பத்தியந்தான் மேவுமத்திவாழைக்காய்
துள்ளுமீனைவிரும்புவீராய் துய்யவுபின்னீரிழந்திர்
கள்ளக்கழிச்சலுபத்திரங்கள் கடிகில்மாறுங்கண்டே ௭௰௫

கழிச்சலுக்கு—வேறு.

அதிவிடையம்வெட்பாலே பெரியகாய
மானதொருநாவறகொட்டைகறுத்தவுப்பு
மதிசேரும்பொன்மிளகுபறபடாக
மாங்கொட்டையோரொன்றுபலமேகொண்டு
இதமாகவேயரைத்து பற்பமாக்கி
பெந்தவகைகழிச்சலுக்குபிடிவீராகிற்
பதமாகமுயிர்பிழைக்குங்கழிச்சல்மாறு
பார்ப்பாண்டன்மருந்திதெனப்பகருவாமே ௭௰௬

புண்ணுக்குக்குக்கில்நெய்.

சிந்திற்றண்டுபேய்ப்புடோலஞ் சிறியவழுதுணைவேர்நிம்பம்
சேர்ந்தஆடாதோடையின்வேர்சேரோரொன்றுபல்மைந்தா
கூர்ந்தஆறுமாகக்கால்நீர் கொண்டுகாய்ச்சியெட்டொன்றாய்
பேர்ந்துவடித்துக்கியாழமதில் பெருகுமருந்துவகைசொல்வேன் ()

சொல்லுங்கோஷ்டம்விளாவரிசி துய்யசெவ்விசிறுமூலம்
செல்லுமதுரங்கொடிவேலி செஞ்சந்தனமுஞ்சிறுதேக்கு
வல்லதாரமாவிரந்தோல் வளருஞ்சுககுசதருப்பை
நல்லசாக்குஒருபலமாம் நயமாங்குக்கில்பதின்கழஞ்சே ௭௧௧

பதிசேர்சரக்குஅரைத்தெடுத்து பகரும்நறுநெய்நாழிவிட்டு
துதிசேர்நெயயைக்காய்ச்சியபின் கூட்டினுடனேகுக்கில்விட்டு
மதிசேர்நெய்யைக்காச்சடைதான் மண்டலங்கொண்டுவருவீராய்
விதியாம்பிரமியமூவேழு மேவுங்குஷ்டம்பதினெட்டாம் ௭௧௨

குஷ்டங்குறைநோய்முரிந்தெலும்புங் கூடும்புண்ணும்புரைமாறும்
கட்டுமுதிரகிலந்தியுடன் கண்டமாலேயறையாபபு
வட்டத்தாப்புண்பவுத்திரமும் வளாமேல்சுவாசமக்கியுடன்
கிட்டம்பிறவிவருநோயும் நவின்றுஓடுஞ்செந்திருவே ௭௧௩

இதற்குச்சுத்தி.

செந்திருமாதேகேளுஞ்சிருமிதசுத்தியுடன்
முந்தியசெங்கற்பொடிபலமா முளைக்குமஞ்சட்பொடிபல்மாம்
இந்தவிதாம்பலமிருபத் தென்னுங்குமரிச்சாறுவிட்டு
நந்தநாலுசாமமுந்தா னன்றுயபலாததுக்காடிப்பிலே ௭௧௪

காடியிலேதானீர்க்கழுகில் கறுத்ததோஷம்போமென்றார்
தேடீரஞ்சில்வேர்மஞ்சள் தேடேரொன்றுஇருபலமாம்
நாடீர்குமரிச்சாற்றரைத்து நற்காடிநீர் தான்கழுவில்
பாடீர்வெள்ளைதோஷமும்போம் பதனம்பண்ணிக்கொள்வீரே ()

கொள்ளேகொன்றைவேர்மஞ்சள் கூட்டுமிதனையொருபலமாய்
கள்ளேகுமரிச்சாறரைத்துக் கழுவியெடுக்கில்தோஷம்போம்
துள்ளேகொடிவேல்சடாமூலம் சுகமாமிதனையொருபலமாய்
அள்ளேயரைத்துக்கழுவீரா யக்கினிதோஷம்போமென்றார் எகூகு

போமேமஞ்சளாமத்தை புகழும்பலந்தானொருபலமாய்த்
தாமேயரைத்துக்கழுவீராய் தக்ககாடிதான்கூட்டும்
தீமேமஞ்சள்தோஷம்போம் செய்யகடுக்காய்தான்நெல்லி
ஆமேமஞ்சளிதுநாலு மடவாய்க்கூட்டும்பலம்நாலே எகூஎ

பலந்தான்கூட்டியரைத்தெடுத்து பழகுங்காடிதனில்கழுகில்
பிலந்தானுண்டாம்விஷதோஷம் பிறகுதிரியின்கடுகுமூன்றும்
கலந்தேபலந்தாமூன்றுகொள்ளுங் கடுக்கக்கூட்டிக்கழுகுவீராய்
தலந்தானறியும்சடாமூலம் தளர்ந்தோஷமணுகாதே எகூஅ

கணுவுக்கொருகாய்பலமிரண்டுங் கடியமஞ்சள்பொடிபலமாம்
அணுவுங்காடிதனில்கழுவி லானதோஷம்போமெனவே
சணுவுஞ்சகலதோஷமும்போம் தக்ககுமரிசாறெடுக்கில்
பணுவுஞ்சிவனார்சானுரைத்தார் பரிவாய்க்கேளும்புளியிதுவே ()

புளியிலைக்குழம்பு.

புளியிலையுங்காடியுமாம் புகழுங்கையாந்தகரையுடன்
குளியும்லவங்கப்பத்திரியுங் குப்பைமேனிமுருக்கிலையும்
தெளியும்பிரண்டைநொச்சிலையுஞ் சேர்ந்தகிட்டம்பலம்நாறு
ஒளிசேர்காடிதன்னிலதை யூறப்போடேமூன்றுநாள் எசுய

ஊறியெடுத்துஅதன்பிறகு உழக்குயியப்பொடியுடனே
தேறுங்கடுக்காயசப்பொடியுஞ் சேர்த்தேபலந்தானைந்துகொள்ளும்
நாறுங்கோமியம்நாழுழி நல்லசர்க்கரைபலம்நாலு
மீறுமேலமிலவங்க மிக்கயிந்துசாதிக்காய் எசுகு

மிக்கஅரத்தைநகைச்சோல மேவுங்கடுகுரோகணியும்
தக்கசிவதைதேவதாரம் சரிசேர்கோட்டமரமஞ்சள்
ஓங்கநருவேப்பிலையுடனே யுற்றதிரிபிமபாலையதும்
தொக்குந்திரியின்கடுகுடனே சொல்லும்பலந்தானலுகொள்ளே ()

கொள்ளேயிஞ்சிச்சாறுவரி கூட்டுகார்த்தம்பழச்சாறு
உள்ளேதேனுமரிகூட்டியு நவுங்கொடிவேல்பலமுக்கால்

துள்ளேகியாழமாக்கியிடு அறவேபிசுருதன்பதத்தில்
இள்ளேயிந்தப்பொடிதூவிக் கிளறிப்பாருபதத்திறக்கே ௭௪௩

இறக்கியிதுவுமாறியபின் னெடுத்தேபொடியுமொருபலமாய்
குறுகரும்பொடியைப்பார்க்கதனிற்குழப்பித்தினந்தான்கொள்வீராய்
பிறக்குங்குன்மம்பெருவயிறு பிறநீர்சோகைபாண்டுரோகம்
உறைக்கும்பித்தம்பாண்டுருகம் ஊஷ்டண்குன்மமாறிடுமே ௭௪௪

மாறுமூலம்ரோகமுடன் வருந்துங்கிராணிகாமாலே
மீறும்பீனிசமிதுமுதலாய் மேகும்சகலவியாதிகளும்
தேறும்படியேபத்தியமாம் தீரும்வியாதிசொன்னேம்நாம்
ஆறுஞ்சடையிற்றரித்தபிரா னன்பாயுணர்த்தார்வெள்ளியதே ௭௪௫

விக்கலுக்கு.

வெள்ளுள்ளிசுக்குபெருங்காய மிக்கயிந்துநசியமதாய்க்
கொள்ளுஞ்சுக்குதிப்பிலிவெல்லம் கூட்டிமுலைப்பால்நசியமிட
தெள்ளுநறுநெய்யிந்துவுடன் சேர்த்தேயொன்றாய்நசியமிட
விள்ளுமிந்துதிப்பிலியும் வெந்நீர்தன்னில்நசியமிடே ௭௪௬

புகை.

குக்கில்பசுவின்கொம்புடனே கூறும்மாட்டுக்கொம்புஅகில்
மிக்கநறுநெய்தான்கூட்டி மிகவேபுகையுங்கொள்ளுவீரே
தக்ககிராம்புமஞ்சளிலே சரிசேராக்குநொச்சிலையும்
சிக்கென்றிருக்குமோண்டஞ் சிறக்கும்வேர்தான்தெரிந்தியெடே ()

எடுத்தேமருந்துமொன்றாக்கி யிட்டுக்காய்ச்சிக்கொடுப்பீராய்
தொடுத்தகாயாசுவாசமுடன் சொல்லுஞ்சன்னிகூதவாத
மடுத்தவியாதியிவைமாறு மறிந்துஅவிழ்தங்கொள்வீராய்
விடுத்தோமின்னம்நீர்கேளு மீளம்வியாதிமெல்லியரே ௭௪௮

மெல்லுநாயுருவிவிரையத்தான் மிகவேதேடிமலைத்தேனில்
அல்லலறவேநீர்குழப்பி யந்திசந்திகொள்வீராய்
வல்லஅமுக்கிராவேரை வளரும்பசும்பால்தனிற்கொள்ளும்
நல்லதிப்பிலிதான்கூட்டும் நறுநெய்யதனைக்கொள்வீரே ௭௪௯

கொள்ளுதயிலமந்திசந்தி கூட்டும்விக்கல்மிகவெடுத்தது
துள்ளுஞ்சுவாசங்கடினமென்றால் சுகமாயெண்ணைபண்ணியிடும்
விள்ளும்வேதுமிகப்பிடிக்க விரும்புபுகைதானுட்கொள்ள
புள்ளும்விளாயிலைநறுக்கிப் பொட்டணிகட்டிமுகந்துகொள்ளே ()

குளிர்ந்ததண்ணீர்நெஞ்சிலிடக் குக்கில்புகையத்தான்பிடிக்க
அளுகுங்காலில்சூடுசுட ஆணநசியம்நாசிவிட
எழுந்தகரும்புதான்தின்ன யிருக்கும்நறுநெய்தான்பிடிக்க
விழுந்தவுளுமெழுந்திருக்கும் விக்கல்தீருஞ்செந்திருவே ௭௫௧

பிரமேகம்நீர்க்கடுப்புக்குவேறு.

தீராதபிரமேகம்நீர்க்கடுப்பு
திருதற்குமருந்துசொல்வேன்செண்பகப்பூ
வார்சேருங்கூவிளம்வேர்நிலத்திற்பண்ணை
வளாகிழங்குஅதிமதூரம்கிராம்புதானும்
கூர்சேருவில்வத்தின்பிசினுதானுங்
கொண்டுதண்ணீர்நாழியுரிநீரைவார்த்து
தார்சேருமுறியாமல்வடித்துக்காய்ச்சி
தழைவிழுதிச்சார்பிழிந்துதயவாய்கொள்ளே ௭௱௨

வேறு.

கொள்ளீரிந்தச்சாறுதனில் கூடும்வெல்லந்தான்கரைத்து
உள்ளேவேடுதான்கட்டி யுதயும்பனியில்தான்வைத்து
விள்ளேவிஷவேதிகுடிக்க விருப்பும்பிறமேகங்கடுப்பும்
அள்ளேயிதனையுட்கொள்ளும் ஆலமுண்டார்தன்னாணை ௭௱௩

குடிநீர்.

ஆலம்விழுதுயிருதூணி யானைசெப்புநெரிஞ்சியின்வேர்
தாலம்புகழும்நாணல்கரும்பு தக்கபாதிரியிலையும்
ஏலமிக்குஅதிமதூரம் மிளகுமாதுவனம்வேரும்
கோலம்பெறவேயதன்பிஞ்சும் கொழுந்தும்பூவுமாவிலையே ௭௱௪

கொழுந்தேகொண்டுஅரைத்துக்காச்சிக்குடிக்கிலிதற்குப் பத்தியங்
கேள்,எழுந்தபசும்பால்நெய்போட்டுஇதுவுங்காய்ச்சிசாய்பொழுதில்
அழுந்தும்பசும்பால்குடிப்பீராயானவெக்கைபிரமியபோம்
விழுந்தஆளுமெழுந்திருக்கும் விமலராணைமெய்க்கருத்தே ௭௱௫

பிறமேகத்திற்கு.

கருப்புக்கட்டிபச்சரிசி காணும்நறுவளிக்கொழுந்து
பெருக்கவொருபிடிகொண்டு பேணியரைத்துவெண்ணெயிட்டு
சுருக்கமுடனேகளிகிண்டி துகள்சேரெள்ளும்பொடிதூவி
விருப்பமுடனேவெண்ணெய்தனில்மிகவேதோய்த்துத்தின்பீரே [illegible]

தின்னும்பொழுதுபல்கடுப்பு செய்யவுமைகடுப்புடனே
உண்ணும்சுக்கிலூன்மயமமுடனேவயிற்றுக்கடுப்புவிடும்
எண்ணும்பிறமேகம்நீரிழிவு ய்பிதுவும்பலதுமிகத்தீரும்
நண்ணும்பெரியமாமுனியும் நவன்றூர்பொன்னுமேனியரோ ௭௱௭

வேறு.

பொன்னாங்காணிக்கொழுந்தும் பொரியுமாதுவளம்விளையும்
மின்னேபயிருஇலுப்பைப்பூமேவுங்கருவிக்கரும்புடனே

சொன்னோம்கூட்டிக்காய்ச்சிவடிதுலங்குமேலாந்தண்டையரை
நன்றாய்க்குடிக்கநீர்க்கடுப்புநசிக்கும்பிரமியம்சங்கையனே. ௭௫௮

வேறு.

சங்கம்வேரும்கரும்புடனேதண்டான்புல்லுக்கிழங்குமாம்
அங்குஞ்சொன்னோமுத்தக்காசுஆலம்விழுதுஅதிமதுரம்
பங்கப்படாதசுக்குடனேபாதிரியினிலைகூட்டி
எங்குமதிக்குங்கரும்புடனேயிவைகளெல்லாஞ்சரிகூட்டே. ௭௫௯

பிரமியநீரில்கடுப்புவிடும்.

கூட்டேபசும்பாலிருநாழிகுலவும்தண்ணீரொருநாழி
மீட்டேவார்த்துழவுழக்காய்மிகவேகாய்ச்சிவடித்தெடுத்து
நாட்டுஞ்சீனியெண்பொடியாய்நன்றாய்க்குடிக்கநாளேழு
ஓட்டுநீரில்கடுப்புவிடுஞ்சிவனாராணைசங்கையனே ௭௬௰

இதுவுமது.

சங்கம்வேராவின்பாலிற்றனியேகொடுக்கப்பிணிபோகும்
பொங்குமாவின்பால்தனிலேபுகழ்சேர்பலைவேர்தான்குடிக்க
மங்கையரேபசும்பாலில்வளருந்திப்பிலிவேர்குடியும்
செங்கண்மாலேபசும்பாலிற்செப்புநெரிஞ்சிவேர்குடிமா ௭௬௧
மாலேயிந்தமருந்துகட்குவளரும்கருப்புக்கட்டிகூட்டு
தாலேபச்சைநெல்லிக்காய்தக்கதேற்றான்விரையுடனே
காலேநறுக்கிச்செவ்விளநீர்கடியதாயூறப்போட்டுவைத்து
நூலேயிருந்துதண்ணீரில் நொய்தாய்க்கரைக்குமருந்துசொல்வேன்
சொல்வேன்கருப்புக்கட்டியுடன்துய்யநலையும்கொம்பிழைத்து
நல்லீரரைத்துக்குடிப்பீரால்நாடும்பிரமியசீர்க்கடுப்பு
கல்லீர்கண்டோடிவிடும்காணுமுடம்புதேறிவரும்
அல்லீர்பிரமியந்தானகலுமன்பாய்வாழுமனிதர்களே ௭௬௨

இதுவுமது.

வாழுமனிதரேசுட்டெலும்புமறுகால்யானைத்தந்தமுமாம்
சூழும்வெள்ளிசூலையுமாம்தூளாபொக்கப்பொடிசெய்து
நாளும்நறுநெய்தனிற்கொள்ளநல்லகடுப்புப்பிரமியம்போம்
கோளுமெண்ணெய்தேனுகில்கொள்ளும்சுக்கில்பிரமியம்போம் ()
பருத்திவிதையின்திண்பருப்புபகருமெண்ணுமொளிமஞ்சள்
பெருக்கத்தனியேவைச்சோடுபிறகுகாட்டிப்பொடிசெய்து
இருக்குஞ்சட்டிதனிலெண்ணெயினிதாய்வார்த்துக்கோழிமுட்டை
மருக்கொள்சாக்குப்பொடிதூவிவளர் சட்டுவத்தாற் றுன்போர்த்து
போர்த்துத்தேங்காய்ப்பால்வார்த்துப்பிறகுதீயாமல்வறுத்து
காற்றுப்படாமற்கலயமதிற்கட்டிவைத்துநாற்கழஞ்சு

பார்த்தேதின்னீர்க்கடுப்புப்பகரும்பிரமியக்கிரிச்சமெல்லாம்
சேர்த்தேயிதுகளோடிவிடும்சிறந்தவில்வாதிதுதானே ௭௬௬

வில்வாதிலேகியம்.

வில்வாதிலேகியந்தான்மிக்கமணிதர்தான்கொள்ள
சொல்வோமேலந்திரிகடுகுதுவளும்கிராம்புதிரிபலையாம்
மல்லாந்திப்பிலிபினமூலம்வளரும்கோஷ்டம்கொத்துமல்லி
நல்லாஞ்சிரகம்நாகப்பூநாறுமிலவங்கப்பத்திரியே ௭௬௭

நாறுஞ்சாக்குஒருபலமாநல்லசித்திரமிரண்டுபலம்
தேறுமிதனையிடித்தெடுத்துத்தெளிவாய்ச்சூரணமேசெய்து
மீறும்வில்வப்பத்திரிவேர்மிகவேபலமுமுப்பதுவாய்
கூறும்படியேபிடித்தெடுத்துக்கொண்டுதாணிநீர்வாரே ௭௬௮

கொண்டேதாணிநீரதனைக்குறுணிகாய்ச்சித்தான்வடித்து
பண்டேசர்க்கரைக்கியாழமகில்பலமுமொக்கவேகரைத்து
செண்டேசெப்புக்கரண்டிகொண்டுதுழாவிக்காய்ச்சித்தேன்பதமாய்
நன்றாய்ச்சூரணப்பொடியைநல்லபாகிற்றூவுவதே ௭௬௯

தூவிக்கிண்டித்தீயாமல்துழாவிநாழிநெய்விட்டு
தாவுலேகியபதத்திறக்கிச்சரியாய்க்கழஞ்சுமூன்றருந்த
மேவும்பாண்டுரோகமுடன்மிக்கஈளைகாமாலை
கூவுஞ்சோகைதாபமந்தம்குலவும்விக்கல்மாறிடுமே ௭௭௰

மாறும்பயித்தியவறட்சூலைவாகாய்மலமுந்தானகலும்
கூறுமுடம்புழுதல்போங்கொள்ளுமதிசாரமும்போகும்
நாறுமுடம்புமணம்வீசும்நல்லமெய்யிற்சுரந்திரும்
தேறுமருந்துதின்றக்கால்சிதைந்தேயோடும்வாதமதே ௭௭௧

கபோலகரப்பனுக்கும்வாதகரப்பனுக்கும்
திமிர்வாதத்திற்குமெண்ணெய்.

வாதமடக்கிபெருநொச்சிமாவிலிங்குகாத்தோட்டி
சேதமணுகாச்சாரணைவேர்செய்யவுவர்வேரிலையுடனே
நாதற்குமிழ்வேராயிலியம்நல்லபட்டைவிராலியின்வேர்
தூதாமெருக்கினிலையுடனேதுவளுஞ்சிவனார்வேம்புகொள்ளே. ()

கொள்ளேகொத்தான்கொன்றையின்வேர்கூட்டுங்கோவையிலையுடனே
அள்ளேவகைக்குத்துடிபலமாமழகாய்பிடித்துத்தான்சேர்த்து
மெள்ளேரவியிற்காயவைத்துமெல்லநீறுஞ்சுண்டினபின்
தெள்ளேயதனைமெழுகுபதந்தெளியவிறுத்துவிள்விரே ௭௭௩

விள்ளும்புங்கம்வேரிலையாம்விரும்புந்தில்லம்பட்டைதன்னை
கொள்ளும்வேலிப்பருத்தியின்வேர்குலவுங்குறிஞ்சிபுளிநடலை

தெள்ளுங்குரோட்டைகிழங்குபண்டிசேரும்கோவைக்கிழங்குடனே
துள்ளுங்கொல்லன்கோவையுடன் துவளுமுருங்கைக்கள்ளியின்வேர் ()

கள்ளேபொதிந்தமொழிமாதேகருதுங்கோவையிலையுடனே
கொள்ளேவெவ்வேறுவ்வொன்று கூட்டும்பலமொன் றொன்றரையாக
துள்ளேநொச்சிவேரிலையைத்தூளாயிடித்துக்கூட்டியபின்
விள்ளேசெங்கத்தாரியுடன்விரும்புஞ்சிறியகீரையுமே ௭௭௪

சிறியகுறிஞ்சிசெம்மணத்தேசேருங்காட்டுமல்லிகையு
மறியுநல்லகமழாசுஆனமயிலின்குருந்தியின்வேர்
குறியாமத்தியிலைவேருங்கூறுவிழிகள்பனைவேரும்
பறிநன்னாரியிவையெல்லாம்பதறுதிடித்தோரளவுகொள்ளே ௭௭௫

கொள்ளேமூந்தியிடித்துவைத்துக்கூறுமருந்துஇருகூறு
முள்ளேயிதனையொன்றாக்கியுதவுமரக்கால்பத்துவிட்டு
துள்ளேவைத்துநனவுபண்ணிச்சொல்லுமேமூநாளூறி
கள்ளேபொதிந்தமொழிமாதேகாய்ச்சிமூன்றுகூறாக்கே ௭௭௬

வேறு.

ஆக்கியகியாழந்தன்னிலதிலிருகசடும்வற்றி
நீக்கியகியாழந்தன்னைநிறையவோர்மரக்கால்வைத்து
தாக்கியகியாழந்தன்னிற்றக்கதோரிலுப்பையெண்ணெய்
சீக்காய்நல்லஎண்ணெய்சிறப்பாபாகந்தேடுவீரே ௭௭௭

வேறு.

தேடும்வேம்புமாமணக்குத்தெரிந்தேயெண்ணெய்சரிசரியாய்
கூடும்படியேயொன்றாக்கிக்குருவுங்கியாழந்தனிலூற்றி
நாடிஞ்சரக்குகர்க்கடகம்நற்சீரகமுங்கடுக்காயும்
வாடும்கருஞ்சீர்வசம்புள்ளிவளருமுலுவாமிளகுசுக்கே ௭௭௮

வேறு.

இளகியவித்துப்பூவுமிலவங்கங்குங்கிலியம்
வளகியசதையின்குப்பைவழுதுறுகடுகுரோணி
பழகியபீநாறியும்பகருஞ்சாதிக்காய்கானும்
கழிபெருங்பிசினும்வெள்ளைக்களஞ்சியின்பருப்புத்தேடே ௭௭௯

வேறு.

தேடுங்கிராம்புவசுவாசிசெய்யகடுகுரோர்வாளம்
கூடுமிதுவாமொவ்வொன்றுகொள்ளுஞ்சரக்கோர்கழஞ்சு
நாடிஞ்சரக்குமெலாமிடித்துநல்குங்கியாழந்தனில்விட்டு
கோடுமூலையேருநாள்வைகொள்ளுமறுநாளையிலே. ௭௮0

அரைத்துக்கரைத்துக்கியாழமதிலன்பாயேழுநாளுநி
உரைத்தேயெண்ணெய்மெழுகுபதமுடனேகாய்ச்சிவடித்தெடுத்து
சிரத்திற்பூசிமூன்றுநான்சென்றபிறகுமுழுகுவீரால்
பெருத்தஎண்ணெய்குடிப்பீரால்பிடிபோம்வாதமங்கையரே எஅக

அபானவாயுவின்குணம்.

மங்கைதனக்குத்திருமதலைவயிற்றிலிருந்துவளர்நாளில்
திங்கள்மூன்றுநாலைந்தாய்ச்சேருந்திங்களீரைந்தில்
பொங்குமுதரந்தனில்வாசிபொருமிப்பாந்துதிரண்டேறு
மங்குஞ்சொன்னேமடிவயிற்றிலடங்குமபானவாய்வதுவே எஅஉ

அடருஞ்சமானநாகமுடனெவெங்காயுள்ளிகொள்ளுந்
தொடருமோதங்கழஞ்சாலைந்துதுய்யவுள்ளிபூண்டுபத்து
படருமுப்புகரைத்தெடுத்துப்பகருஞ்சாக்குதனில்வார்த்து
தடருமுலையாயவித்திறக்கித்தாக்குமாவாய்க்கொள்வீரே எஅ௩

கொள்ளும்பச்சைத்தேனதனில்குலவும்வெருகின்பிடியளவு
உள்ளேகொள்ளுமெழுநோமுதரமதனில்வாய்வகலும்
கள்ளேபொதிந்தமொழிமாதேகாய்ந்ததண்ணீர்பரிமாறும்
எள்ளேயாலுங்குளிர்ந்ததண்ணீரெடுத்துப்பரிமாறவேண்டாம். ()

அண்டவாதம்பலவாதத்திற்கும்

அண்டவாதம்பலவாதமனலில்வாதமதுதனக்குத்
துண்டமதிசேர்நுதலாளேசொன்னேஞ் சிற்றாமணக்கெண்ணெய்
கொண்டகழற்சிப்பருநாழிகோதுதள்ளிமணியெடுத்து
எண்டுஞ்சிற்றவரைக்கிழங்குமீசன்மூலிகொடுவேலி எஅரு

கொடியமருந்தையரைத்தெடுத்துக்கொள்வீர்பாக்கினளவாக
கடிபகாலாம்பூபுகாரிசிகருதும்வெளுத்தபிசின்வசம்பு
படியில்வளரும்வெள்ளுள்ளிபகருங்கருசிர்தேவதாரம்
வடிசேர்சிவந்தசந்தனமும்வளரும்வெளுத்தபிசின்தேடே எஅசு

தேடேசரக்குவேரொன்றுசிறப்பாய்க்கொள்வீர்இருகழஞ்சு
நாடாயரைத்துஎண்ணெய்தனில்நல்குங்கியாழந்தனில்விட்டு
ஈடாயெரித்துமெழுகுபதமிறக்கிக்காண்டிகாலையில்தான்
கோடாமுலையேகொள்வீரால்குடிபோம்வாதம்வல்லவளே எஅஎ

வல்லதொருமாவிலிங்கிலைவேர்ப்பட்டை
வளர்பலமுமிருபதும்வகுத்துக்கூற
நல்லதோர்கிளிவேர்பலமேமூன்று
நயமுடையவேலிநற்பருத்தியின்வேர்
சொல்லவேபலமூன்றுபெருங்குருந்து
துப்புதொருசிவதைநயுடனறுவாய்வேரும்

இல்லமொருகொடிவேலிகாண்டைநொச்சி
இயல்வாதமடக்கியமுக்கருவேர்தேடே ௭௮௮

தேடியவேயொன்றுபலமேமூன்று
சிறக்கவேகொத்தியிடித்தொன்றதாக்கி
நாடியதோர்புனல்விட்டுப்பாதியாக
நயமுடனேகாய்ச்சியிதைக்கியாழமாக்கி
கூடியதோர்பெருங்காயந்திப்பிலியுங்
குணமுடையவெண்பிசினுங்கடுகுதானும்
பாடியதோர்வசம்புசுக்குமிளகுமுள்ளி
பகர்கோஷ்டமாத்திதகார்புகாரிசி ௭௮௯

வேறு.

அரிபகடுகுரோகணியுமானவாலுளுவையுடன்
புரியுங்கருஞ்சீர்நற்சீரம்போதவெவ்வோரொருபிடியாம்
தெரியுஞ்சாக்கெல்லாமரைத்துச்சேருங்கியாழந்தனில்வார்த்துச்
சரியாய்வேப்பினெண்ணெயுடன்தக்கமெழுகுபதம்வடியே ௭௯௰

வடித்தேயெண்ணெய்சிரசில்வைத்துவளருமெய்யிற்றான்பூசி
குடிப்பீர்மூன்றுகாசெடைதான்குத்தும்புறவீச்சுட்குத்து
துடிக்குங்கைகால்முடக்கியதுசொல்லுஞ்சன்னிப்பற்கிட்டு
கொடிக்குளிதுகடான்றீருநுகருமாவிலிங்களண்ணெய் ௭௯௧

மாவிலிங்களண்ணெய்.

வேறு

திருந்தியதோர்மாவிலிங்கவேரின்பட்டை
செய்யதொருமாம்பட்டைசித்திரமூலம்
பொருந்தியதோர்முருங்கைவேரிதுகள்நாலும்
பொட்டெனவேவெவ்வேறுபலம்பத்தாக்கி
வரும்படியேதறித்திடித்துமிடாவிற்போட்டு
வளர்மரக்கால்நாலுகொண்டுவார்த்தேதண்ணீர்
தரும்படியேகாய்ச்சியொருமரக்காலாக்கி
தக்கதொருவேப்பெண்ணெய்சரியாய்நாழி ௭௯௨

வேறு.

நாழிபெண்ணெய்தான்விட்டுநல்லமருந்துகொடிவேலி
சூழுநொச்சியாமுரியுந்துய்யகுதிரைவாலியொடு
வாழுங்காண்டைசிவதையுடனவளருமுத்தமோரொன்று
ஆழும்விளாங்காய்தன்னளவுஅரைத்துக்கரையீாகியாழமதில் ௭௯௩

தக்கதிப்பிலிசிறுதேக்குச்சரியாமிளகுசிற்றரத்தை
தொக்கவிருந்துவாலுழுவைசுக்கமாய்க்கடுக்காய்குருசானி.

மிக்கவுள்ளிவேரொன்றுமேவுங்கழஞ்சுதான்கொண்டு
வக்கமாகஅரைத்தெடுத்துவார்க்குங்கியாழந்தனில்வாரே எகூரு

வாராய்நல்லசந்தனந்தான்வழங்கும்பலந்தானொன்றுகொண்டு
சீராய்வெப்புஎள்ளெண்ணெய்சிறக்கவெவ்வேற்சரிசரியாய்
நேராய்விட்டுக்காய்ச்சியதைநிதமுமுச்சியுடல்பூச
நீராவாதப்புறவீச்சுந்திருந்துமாணவலிவாதம் எகூசு

வாதசன்னியுட்குத்துவருந்தங்கைகால்முடங்கியதும்
பேதமாகப்பற்கிட்டும்புறகுத்தோடுநிமிர்வாதம்
காதவழிதான்விட்டோடுங்கடியஎண்ணெய்பூசிடிலே
நாதாணையுண்மைசொன்னேம்நல்லதாமவ்விளங்காயெண்ணெய் ()

சினப்பாருதந்தின்றுஅவபத்தியமானவர்க்கு

நல்லசூதஞ்சீனப்பாநாளுமாதர்தின்றுமதை
வல்லபத்தியமுறிந்துவருத்தமுண்டாயுடம்பெங்கும்
அல்லலறவேதான்கட்டிபடுத்தேமுடங்கிக்கிடந்தவர்க்கு
செல்லுமருந்துபரிகாரஞ்செய்யுந்துணங்கேள்தேன்மொழியே எகூஅ

மொழியுஞ்சூதநாலரையாய்முன்னேவிராகனெடைதானும்
பொழியுமிமுப்பதுவாரம்போதப்பணவிடைதானுகுந்
தெளியும்பொன்னினரிதாரஞ்சேர்ந்தபணவிடைபதின்மூன்றும்
கழியுங்கறுத்தகுங்கிலியங்கனத்தபணவிடையொன்பதுவாம். எகூகூ

கனத்தகடுகுபணவிடையேழுகடியமிளகுபணிரண்டு
இனத்தேபெருக்கங்கரிதானுமிதுவும்விராகனெடையரையாந்
தனத்தசயந்தானுருக்கியதைத்தக்கயிரதமதில்விட்டு
பனைத்தஅம்மிதனில்வைத்துப்பருத்திபிலைச்சாற்விட்டரையே. ()

விட்டேமெழுகுபதமரைத்துமிகவேபெழுவுண்டைசெய்து
தொட்டபுகைதான்வீடுமுதல்துலையாயெட்டுநாளெண்ணெய்
கட்டும்பூசினிக்காய்தான்கறிக்குச்சரியாய்க்கூட்டியிடு
நட்டமில்லாப்பூசினிககாய்நல்லசாறுவுச்சியிலே அாக

உச்சியுள்ளங்கால்மட்டுமொக்கத்துவாலைதான்போடு
வைச்சேயொன்பதுநாளைக்குவனையாய்க்குப்பியில்தானிறுத்து
நிச்சயமாய்கழுநீல்நீரோய்ப்புளியம்பொருககிட்டு
மெச்சத்தணலைபுண்டாக்கிமேவுமுண்டைபாதியிடே அாஉ

பாதியுண்டையைத்தான்போட்டுப்பகரும்புகையைவிடுவீரே
நீதியுடனேபக்கிவிடுத்துநேராயேழுநாள்புகையும்
கோதுசெறியுங்குழலாளேகொள்ளும்பூசினிக்காயும்
முதியுடனே பூரிநல்லபாமுந்துங்கத்திரிக்காய்புளியே அாங

கத்திரிக்காய்புளியாங்கடியகீரைதான்புளியாம்
நித்தந்துராயும்புளிச்சாறும்நோாமோருமீருள்ளி
சுத்தப்படவேதான்கூட்டுந்தய்யநீர்ச்சோறுங்.பீரே
அத்தாணேயொன்பதுநாளானதண்ணீரில்வையும் ௮௱௪

வையுமேழுநாளைக்குவாகாய்த்தண்ணீர்தன்னிலேதான்
தொய்புமெட்டாநாளுடம்பதோற்றமாகவாறிவிடும்
நையுமொன்பதாநாளில்நல்லமணக்குளெண்ணெயிட்டு
பையமுழுகிவருவீரால்பகருமாறுமாதமட்டும் ௮௱௫

ஆறுமாதநல்லெண்ணெயானமிளகுமீனுகாது
கூறுமிரதந்தானக்கக்கொள்ளீர்பொன்னுங்காணிச்சாற்
ஊறுமுச்சியுள்ளங்காலொக்கத்துவாலே நான்போடுந்
தேறுஞ்சாகமரைக்கொத்துதிறமாயுள்ளேகொள்வீரே ௮௱௬

உள்ளேசாகந்தான்குடித்துஉற்றஆட்டுத்தோலதனில்
மெள்ளவெயிலிற்றுனிருக்கவிளங்குமிரதங்கக்கிவிழும்
கொள்ளுமிரண்டுநாள்துவாலேகுணமாய்ப்போடுங்குறிப்புடனே
துள்ளுஞ்சாகமுட்கொள்ளச்சொன்னேந்தோகைமண்டையிதே ௮௱௭

மண்டைவியாதியின்குணம்

மண்டைவியாதியின்குணத்தைப்பானேகேளுமகிழ்வாக
கண்டபடியேதலையோட்டிக்கருநிச்சொரியமோகாது
முண்டமதிசேர்முகநோவுமூளைசுவருமயிர்திரையுஞ்
செண்டேதலையிற்குள்ளேதான்சிறுகச்சத்தமாயிருக்கும் ௮௱௮

இருக்குமுகத்திலேநரம்புவெதிர்த்தேதெறிக்குமூச்சிடிக்கும்
பெருக்குநாவுதான்வறளும்பேசொண்ணாதுபல்கடிக்கும்
தொருக்கும்பிடரிதான்கடுத்துதுய்யமோபோல்தான்விழுந்து
பருத்திக்கொட்டைதிரித்தாற்போல்பார்க்கவிழுஞ்சலந்தெறிக்கும் ௮௱௯

விழுமோத்தம்நாவாலேமிகவுநாறிநெஞ்சுகள்நோம்
எழுமேயுடலும்வறண்டுவருமெங்குஞ்சிறுகக்கடுப்புண்டாங்
கொழுமேயிதற்குமருந்திதெனக்கூறக்கேளுங்கோதையரே
கழுமேகருவேற்பட்டையுடன்கையாந்தகரைகற்றாழை ௮௱௰

கற்றாழைதான்சாறெடுத்துக்கடையின்மருந்துஇலவங்கம்
பெற்றேயேலமதிமதுரம்பெருகுங்கோஷ்டஞ்சண்பகப்பூ
சற்றேயரத்தைசாதிக்காயதானறிக்காயுஞ்சிறுதேக்கு
உற்றேயதிரபேதியொடேயொருநாற்கழஞ்சுதான்கொள்ளே ௮௱௰௧

கொள்ளேசரக்குத்தானரைத்துக்கூறுமெண்ணெய்நெய்நாழி
யுள்ளேகூட்டிக்காய்ச்சியிதையுச்சிதனில்வைப்பீரால்

வெள்ளைநாசிவுரியுடனிலைசாற்கூட்டித்தானெரித்துப்
பிள்ளைநாசிதனிலிடப்பெருகும்வியாதிசிதறிடுமே ௲௰௨

கைகாலெரிவுக்கெண்ணெய்வேறு.

சீதேவியார்செங்கழுநீர்சீந்திற்றண்டுபலமிரண்டு
மாதேயிடித்துஇருநாழிவளருந்தண்ணீர்தான்காய்ச்சி
பேதேநறுநெய்நல்லெண்ணெய்பெருகுங்கியாழந்தனில்விட்டு
கோதேமதுரங்கோஷ்டமொடுகுலவுமாஞ்சிலிலவங்கம் ௲௰௩

குலவுமேலமிலவங்கங்கோரோசனையுங்கொடியமஞ்சி
இலகுநெல்விசந்தனமுமிலாமிச்சைவேரிருவேலி
அலகுமிவையொருகழஞ்சுகொண்டுஅரைத்துக்கரைத்து வடித்தெடுத்து
உலகுள்ளோர்கள்தான்பொருத்தியுள்ளுங்கழஞ்சுகொள்வீரே ௲௰௪

கைகாலெரிப்புத்தீருங்கண்ணுக்கெண்ணெய்

கையாந்தகரைநெல்லியொடுகருதுமிளநீராவின்பால்
மெய்யாஞ்சீந்திற்றண்டுடனேமேவுஞ்சாறுஇருநாழி
தொய்யாவெண்ணெயிருநாழிசுகமாங்கோஷ்டங்கைச்சோலம்
பொய்யாமதுரம்சந்தனமும்பொருந்துநாகப்பூவேலம் ௲௰௫

பொருந்துங்கிராம்புசெண்பகப்பூபோதவளருங்காசுமுத்தம்
திருந்துமேதாமரைவளரும்சேரவரைத்துக்கரைத்துவடித்
தருந்துமேதான்முழுகுவீரால்தலையில்வறட்சிகண்ணேயும்
மிருந்தளரிப்புமிகத்தீரும்வற்றாந்தாதியெண்ணெயிதே ௲௰௬

கண்ணுக்குத்துத்தாதிமை.

துத்தந்தூரிசுவெங்கல்தாராதுய்யகடுக்காய்ப்பூவிடனே
உற்றதிப்பிலிசெம்பிளம்பாக்குமுதவுமருதேளெழுகழஞ்சு
தெற்றதேசிப்பழச்சாற்றால்தெளியவேழுமருந்தரைத்து
மெத்தசீலைதனிற்றடவிவிரும்புநிழலில்தானுலர்த்தே ௲௰௭

விரும்பும்புளிதான்விளாத்திபிலேமேவும்வெப்புவுப்பிலிதான்
பொருந்துநகையான்சாரணையும்போதமுருக்குந்தேள்கொடுக்கு
சுருங்குமீசங்குஇவ்விலைகள்சுறுக்காய்வெவ்வேற்தான்கூட்டி
திருந்தத்துவைத்துவெவ்வேறுசீலையதனிலூட்டிரே ௲௰௮

வேறு.

ஊட்டியேசீலைதன்னையுலர்த்தியேதிரிதிரித்து
தாட்டிமையாகமையுஞ்சத்துடன்பற்றவைபுங்
கூட்டியேபசும்வெண்ணெயில்குழைத்துநீர்சிமிளில்சேர்த்து
நாட்டினில்விழிதன்மேய்க்குநலம்பெறப்போடுவீரே ௲௰௯

போடுவீர்துத்தாதிமைபுரிகண்புளிகண்நிமைதடிப்பு
ஓடும்நீரில்பாய்ச்சலுட னுதவும்படலமாணிப்பூ
கோடுமுலையேபுழுவெட்டு கொள்ளும்புகைச்சல்காசமெல்லாம்
வாடும்நாள்சென்றேபிறகு வருந்தும்வருந்துமந்தாரகாசம் ௬௨௰

வேறு.

மந்தாரகாசமென்று மகிழ்பித்தகாசமென்றும்
அந்திரநீலகாச மணிசுக்கிலகாசமாகும்
குந்தல்விழிகள்தானுங் குறுகண்ணுமாறுமென்றும்
அந்தமாமுனிவர்தாமு மருள்புரிசேமத்தாரோ ௬௨௧

காசத்துக்கும்பூப்படலத்திற்கும்—வேறு.

சேமத்தாகியபூப்படலந் திமிர்காசங்களிவைதனக்கு
ஆமக்கோடுமுதலைப்பல் லதனிற்பன்றிக்கொம்புடனே
நாமத்தாகியவெள்ளிபுலி நல்லசேவகர்நெஞ்செலும்பு
காமத்தாகியலவங்கப்பூ கடியசாதிக்காய்கூட்டி
ஊமத்தாகியநறுவளியு முயருஞ்சண்பங்கிராம்புடனே
வாமத்தாகியதேத்தான்கொட்டை மற்றுந்துத்தமுமித்துடனே
தேமத்தாகியபகைப்புந்திகழுமெலுமிச்சம்பழச்சாற்றால்
சேமத்தனைத்தவுண்டைதனைச் செலுத்திக்காடிதெளிமானே ௬௨௨

குழந்தைவியாதியின்குணம்.

மானேகுழந்தையதுதனக்கு வருளுங்கணத்தில்சுரமுண்டாம்
தேனேநாக்குத்தானுணர்ந்தா செய்யுங்குணங்கேள்நீர்வாங்கும்
தானேசிறுவர்தங்களுக்குச் சரீரமதனில்பிணியதனை
கோனேபோற்றியுணாத்தோமே கூறக்கேளுங்கோதையரே ௬௨௩

கூறுஞ்சில்கணமதுதனக்குக் கூறுங்கைகால்வயிரழியும்
ஊறுமுடம்புதான்காயு முற்றஅணைக்குமேலாக
வேறுதாகமிகவுண்டாய் மிகுந்தேவருத்தமிகுதியுமாம்
ஆறுந்தரித்தசிவனுணை யானகுணங்களுணாத்தோமே ௬௨௪

உணாத்தோம்ரத்தகணமதுக்கு ஒக்கவயிற்றிலனலுண்டாம்
திணாத்தநேத்திரவாய்வுடனே சேர்ந்தசூடுமிகவுண்டாம்
வணாத்தநாக்குத்தான்பூக்கும் வயிறும்கழியும்வட்டமிடும்
புணாத்தேவயிறுதான்கடுத்துப் போதரத்தந்தான்கழியும் ௬௨௫

கழிக்குங்கண்கால்தான்குளிருங் கழியச்சுழியத்தான்வா...
வழிக்கும்நாக்குபூர்த்திருக்கும் வயிறுகழியுங்கணவட...
கொழிக்குங்குழந்தைதங்களுக்கு கூறுங்குணங்கள்...
தெழிக்குஞ்சிவனார்தன்னுணை சொன்னேனுங்குணங்களி... ௬௨௬

வயிறுபொருமிவாயிலெடுக்கும் வயிறுபேதமாய்க்கழியும்
வயிறுவலிக்கும்கைகால்கள் வந்தேநபொறுமல்தான்வலிக்கும்
வயிறேவலித்தூத்தனுக்கிட்டு வந்தாமுதாருகால்கைகள்
வயிறுபொருங்கைகால்கள் வனைத்தவில்லுபோலாமே அஉஅ

வில்லுபோலேவலியுண்டா மிகவேகைகால்குளிர்ந்திருக்கும்
பல்லுங்கிட்டுஞ்சூடெழும்பும் பாதிநோரங்குளிர்ந்திருக்கும்
சொல்லுமுக்கேகணங்லூக்குஞ் சேர்ந்தவுடம்புதான்காயும்
வல்லைமூச்சுவுண்டாகு மஞ்சள்நீதாமக்கரமே அஉஅ

அக்காரத்தாக்ருவாய்புண்ணு மழகாய்காக்குபூர்த்திக்கும்
ஒக்கவயிற்றினைலுண்டா முடல்கள்முழுதாஞ்சுரமுண்டா
மிக்குமிந்தவியாதிகட்கு மீளும்படியேமருந்துசெய்யில்
நிக்கும்படியேமுனிவோரும் நிகழ்த்தியுரைத்தாருலகோர்க்கே ()

கோவைவேர்முசுமுசுக்கை கொள்ளுமம்மான்பச்சரிசி
தாவும்படகம்வல்லாரை தகரைதுத்திபழம்பாசி
தூவும்வெள்ளைக்காக்கணம்வேர்சொன்னேங்கருவேல்பட்டையுடன்
காவும்வசம்புவாய்விளங்கங் கடுகுரோகணிசிற்றரத்தை அரூய

சித்தமகிழுங்கருஞ்சீரஞ் செங்கத்தாரிபேரரத்தை
ஒத்தைக்கருவாப்பட்டையுடன் உள்ளிப்பூடுஅதிவிடையும்
மெத்துங்காட்டுச்சீரகமு மேவுங்கம்பிப்பிசினுடனே
பத்துமோதமொவ்வொன்று பலந்தான்காலேகொள்வீரே அரூக

பலஞ்சேரோரிலைத்தாமரையும் பழகுஞ்சிறியபுள்ளடியும்
நலஞ்சேர்பலந்தானொன்று நல்லவெள்வேல்கொன்றையுடன்
பிலஞ்சேர்கொத்தமல்லியுடன்பேணிப்பலந்தானாக்கக்கொள்ளுங்
குலஞ்சேர்சாதிக்காயுடனே கூட்டுங்கிராம்புவசுவாசே அரூஉ

கூட்டுஞ்சரக்குவிராகனெடை கொள்ளீர்காலத்தானுமே
காட்டில்வளருஞ்செண்பகப்பூ நல்லதிப்பிலிமாசக்காய்
மீட்டும்விராகனெடைபொன்று மிகவேயிடித்துத்தூள்பண்ணி
காட்டுங்கற்றுழஞ்சோற்றில் கடுக்காயபோட்டுத்தெளியவையே ()

தெளியுந்தண்ணீரொருகாண்டி சேரும்படியாமணக்கெண்ணெய்
பொளியுஞ்சரக்குஎண்ணெய்தனில் போதவிட்டுக்காய்ச்சியதை
ஒளியுமொருதுட்டெடைகொடுத்து வுயரமேலுந்தான்பூசி
அளியும்வியாதிகடினமென்று லதிகமாக்கொள்வீரே அரூச

அதிகமானகணைமைந்துமக்ரமானவியாதிகளும்
மதிசேருடலில்நில்லாது மாந்தமறுமேவியாதியும்போம்
பதிசேருலகோர்தங்களுக்குப் பகர்ந்தோம்புளிப்புமினிப்பாக
கதிசேர்கிராந்திதான்மூன்றுஞ் சொன்னேம்பித்தமாகாதே அரூரு

பித்தத்தில்வெப்புருணம்.

பித்தத்தில்வெப்புகொள்ளில் பெருத்திடுங்குளிர்ச்சிதானும்
ஒத்ததத்தவுதிரம்நோவு மூவாந்தியுட்கழிச்சல்விக்கம்
மெத்தத்தசுரங்கள்நீர்களவைவிடவேகமுண்டாம்
தைத்துச்சுபித்தம்வந்துகாந்துபின்பட்டால்கேழே ௮௬௬

கேழேநின்றவாய்வுகள் கிளர்ந்துமேமேலேநோககிடுகில்
நாளேநல்கிமீளாது நன்றாய்மேலேநின்றேத்த
தாளேமிகவும்விஙகாது தண்ணீர்கேளாதற்றிருக்கில்
மீளாதிதுவேதிண்ணமெனவினைந்துமருந்துசெய்கண்ணுளே ௮௬௭

கண்ணேமுகங்கள்வெளுப்பிட்டுக் காலோடுதிரட்விக்கமுமாய்
தண்ணீர்தாகமிகவுண்டாய் தாக்கிற்றுகமொறுமொறுர்த்து
விண்ணேசுழன்றுமிடுக்கற்று மிகுந்தேமலமுமடைப்படுத்தில்
எண்ணுதிவணையொன்றுகவிதுமாணமென்றறிநெஞ்சே ௮௬௮

மாணக்குறிவேறு.

நெஞ்சினிலடைத்துவாங்கி நின்றுநின்றெரித்துக்காட்டி
பஞ்சுபோல்காவுங்கண்ணும் பாண்டமும்வெளுத்துக்காலு
மஞ்சவேவீக்கமுட்டு மடுத்தடுத்தளதேயாகிற்
செஞ்சிடமல்முந்தியிற் கெடுகாலநற்சீராமே ௮௬௯

வயிற்றுக்கடுப்புக்கு

நற்சீரகத்தைதவைத்தோட்டில் நயந்துமிகவேபுடமிட்டு
உற்றேயிடித்துத்தூளதுசெய் துறவேசீனியேழ்கொண்டு
நற்றேமணக்குநறுநெய்யில் நயந்தேயளாவியருந்திடுகில்
பற்றுவயிற்றுக்கடுப்பதுவும் பறந்தேபோகுமிதுசதமே ௮௭௰

சுவாசகாசக்குளிகை.

இரதங்கெந்தகம்வெண்கார மெண்ணுநாபிமனோசிலையு
மருவுந்தாரம்பற்படகம் வண்மைதிப்பிலியிதுசமனாய்
ஒருமைநொச்சிக்கண்டங்காலி யோங்குமாடாதோடையிலை
பெருகுஞ்சாறேழ்நாளரைத்துப் பின்னும்பயாளவுண்டைசெய்யே.

செய்தவுண்டைதேன்நெய்யிற் சிறந்தசீனிதனிற்கொள்ள
ஐயங்கிளையாச்சுவாதம்பத்து மானயீளையிருமலைந்தும்
வெய்யகுன்மமிருபதுடன் மிகுந்தசுவாசமனைத்தையெல்லா
முப்பும்வேறேயிடமில்லை ஓடுங்கண்டாயிதாமதே ௮௭௨

உட்குத்துக்கு.

இதாஞ்சுக்குவெண்கார மியல்சேர்கடுகுதிப்பிலியுந்
சித்திராச்சினக்காரமுடன் சேர்ந்தபினகுபெருங்காயம்

பதரூஅரத்தகருஞ்சீரம் பகருங்கொன்றைப்பழச்சாறும்
விதமாய்விட்டுஅரைத்தெடுத்து மிக்கதூதுவளங்காய்போல் ௮௪௩

தூதுவளங்காய்ப்பிரமாணந் துய்யவுண்டைதான்செய்து
மாதேயிளவெந்நீர்தனில் வருந்திக்குடிக்கக்குத்திவிடுங்
கோதேகொடுவேலரிசியுடன் கூட்டியிடித்துப்புட்டாக்கி
போதேபசும்பால்புட்டருந்தில்போகுங்குத்துகையாமே ௮௪௪

கையாந்தகரையிருநாழி கருதுங்குமரிமுன்னாழி
மெய்யாமொண்ணெண்ணெய்பைந்தழற்கு மிக்கஆவின்பால்நாழி
பொய்யாமிதராமீராறு போதவடித்துச்சிரம்பூசில்
மெய்யாய்வந்தவுட்குத்தம் வெளியாங்காசங்கற்பாளே ௮௪௫

இரத்தகுன்மத்தின்குணம்.

செற்பந்தரிக்குமத்தலத்தில் கேளுஞ்செளிம்புரத்தமுமாய்
அற்பதானுமொன்றாக்கி பாகத்திரண்டுகட்டுண்டு
தற்பாமாதந்தான்றோறுந் தலையாமழுக்குத்தான்மாறி
இப்போபிள்ளைக்குண்டான இயம்புகுறியுங்காண்பிக்கும் ௮௪௬

காணுமுலையிற்பாலுண்டாங் கனத்தவயிற்றில்மயிரொழுக்கம்
பேணுமுலைக்கண்தான்கறுத்து பிறகுவயிறுதான்வீங்கும்
தோணுந்திங்கள்தினமானஞ் சுகமாய்ப்பிள்ளைபோலிருக்கும்
நாணும்பெரியவயித்தியர்கள் நன்றாயறிந்துசெய்புகவே ௮௪௭

செய்யுந்திங்கள்பத்தானால் சேரும்பிள்ளையல்லவென்று
வையம்புகழும்ரத்தகுன்ம மாறும்படிக்குமருந்துசெய்யும்
நெய்யும்பழைய அரிசிதனை நன்றாயெடுத்துச்சோறாக்கி
நெய்யிலுள்ளிதான்பொரித்து நெய்ச்சோறுண்பீர்கடுகாக ௮௪௮

கடுக்காய்நெல்லித்தான்றிக்காய் கனத்தமிளகுதிப்பிலியும்
முடுக்காஞ்சுக்குவிளாவரிசி முதியகொடிவேல்கொத்தமல்லி
எடுக்குஞ்சரக்குசெவ்வியமா மிசைந்தகழஞ்சுமூன்றாக்கி
தொடுக்கும்பசும்பால்வார்த்தரைத்து துய்யநெய்யும்பசும்பாலும் ௮௪௯

பாலும்நெய்யுந்தான்விட்டுப் பதத்தில்வடித்துவுள்ளேதான்
காலமந்திதினமானங் காசினிடைதான்மூன்றுகொள்ள
மேலும்ரத்தகுன்மமது மிருந்தேமாறியோடிவிடும்
ஆலமுண்டகண்டர்திரு வாணையிதுதானென்றறிநீ ௮௫௰

அறியமிதற்குப்பத்தியங்கே ளானகாடைகவுதாரி
வெறிமான்புல்வாய்முயலுடும்பு மிக்ககுருவியிறைச்சியுமாம்
கறிபூசினியின்வெள்ளரியின் கடியபிஞ்சுதூதுளங்காய்
சுறியாம்பிரண்டைச்சாரணையும் சுரையாங்கொழுந்தாம்பித்தபதே ()

பித்தகுன்மத்தின்குணம்.

பித்தகுன்மத்தின்குணங்கேளு பெருக்கவஸ்திதாகமுண்டாம்
சத்தியெடுக்கும்பிளித்தேப்பம் தருகாவாயும்கைப்புண்டாம்
உத்தேவாந்தியுண்டாகு மோங்கேநெருப்புவெய்யில்கண்டால்
சித்தமுடனேயுடல்பொருந்திச் செய்யசிறுநீர்சிவந்திருக்கும் ௮௱௨

இருக்கும்பித்தகுன்மமது யிளேயிருமலுண்டாகும்
பெருக்குமருந்துகெந்தகமும் பேணுமிதாம்அரப்பொடியும்
சுருக்கமுடனேகழஞ்சுகொண்டு துய்யகுமரிச்சாறணைத்து
பருக்கபற்பமாவாக்கிப் பையவெளியில்வைப்பீரே ௮௱௩

வைத்தபிறகுபுகையெழும்பில் வாகாய்ப்பதமாமென்றறிந்து
உத்தேயெடுத்துவைத்துவதையொருநாளொன்றில்வெருகடிக்குன்
பித்தபாண்டுரூபமுடன் பிளித்தேகிட்டும்பீலிகையும்
மத்துங்குன்மங்குடல்பிரட்டு மாறியோடுங்காலுடனே ௮௱௪

கவுசையின்குணம்வேறு.

காலுடன்கையும்வற்றிக் கனத்திடும்வயிறுதானும்
மேலுடல்வீங்குமாகில் விளைந்திடுங்கவுசைதானே
மூலமாயகோதாமு முத்திடுந்திங்கள்மூன்றில்
ஆலமாம்வியாதிசொன்னே மாழியுஞ்சங்குபோல ௮௱௫

ஆளியிற்சங்குபோல அடிக்காலுந்தாளும்வீங்கி
மீளுடநீர்திருகி நெருங்கியேமலங்கள்சாரக்
கோளிடும்பெருவயிறுய்க் கொளுந்திடுந்திங்களாறில
நாளினில்நாளுக்குநாள் நவின்றதுவிளையுங்காணே ௮௱௬

விளையுமேகவிசையுண்டாய் மேவியமாந்தமெல்லாம்
பழகியதிங்கள்மூன்றில் பையவேமரணமாகும்
அழகியதோள்முழங்கை யத்துடன்வற்றிநிற்கும்
ஒளிசெறிகண்ணும்நீல முடம்பெலாஞ்சரசரக்கும் ௮௱௭

உடம்பெலாம்வில்லுபோல வொக்கவேநிமிர்ந்துகொள்ளும்
தடமயில்முளைக்கிடாவுந் தண்மைபோலிருக்குமென்க
திடம்பெறுங்குணங்கள்தன்னைத் தெரிதமிழ்தன்னுலாய்ந்து
நடம்பெறுங்கவுசையான நற்குணமுரைப்பேன்காண்பாய் ௮௱௮

ஒடுவுக்கு யெண்ணெய்வேறு.

காஞ்சொறிபுங்குநீர்ப்பூலா கடியபொன்னுவிரைவேரும்
நீண்டதுடரிகடலாஞ்சி நிறயாஞ்சாயவேருடனே

பூண்டேயெழு முளக்கல்லொதிபின் பொருந்தும்வேர்களொருசரியம்
கூண்டனைப்புவசம்புள்ளி கொள்ளுமுலுவாக்களிப்பாக்கு ௮௱௮

பாக்குக்கடுக்காய்சமோதம் பகர்திப்பிலியின்செவ்வல்லி
காக்குந்துரிசுவெம்பாடல் கருதுமதூரமிலவங்கம்
ஏர்க்குமேலங்கொத்தமல்லி யிசைசேர்சிவந்தசந்தனமும்
தாக்குமிவைகளொருநிறையில் தக்கயெண்ணெய்காய்ச்சியே ௮௱௯

எண்ணெய்.

தடாரிவேரும்பல்மாதுந் துய்யகுருவிச்சயன்வேரும்
படருங்கிருவைகொன்றையொதி பட்டைமுளகருக்காவேர்
அடருஞ்சுக்குகைப்புடனே ஆனவெம்பாடல்வேரும்
மடல்சேர்நிறையில்தான்கூட்டிவளர்நல்லெண்ணெய் தனில்காய்ச்சே

காய்ச்சிவடித்துயெடுத்தபின்பு களவுபார்த்துப்புண்ணதனில்
கூச்சமறவே பூதுவீராய் கொடியவொடுவும்புண்ணுநும்
வாய்ச்சதிரிகிலூட்டியெண்ணெய் வளமாய்ப்புண்ணில்மாறிவைக்க
பேய்ச்சிமுலையைப முதுண்ணும் பெருமானாணைமாறிடுமே. ௮௱௰௧

பிறவிச்சுக்குமந்தசன்னிக்குமெண்ணெய்.

சுக்குமிளகுதிப்பிலியுந் துய்யகருஞ்சீர்புகாமரிசி
க்குமாத்தைமாமஞ்சள் கடிப்பகுப்பைசோமனுதி
புக்குங்கஸ்தூரியின்மஞ்சள் புகழுங்கொடிவேல்வசம்புள்ளி
நக்குமுன்னையமுக்கூறு நல்லசாரணையின்வேரே ௮௱௰௨

வேர்சேர்மிளகருணையின்வேர் மிகுந்தஅப்பைக்கிழங்குடனே
கூர்சோதண்டையுடனே குலவும்பெரியமருந்தின்வேர்
நேர்சேர்சாக்குவொருநிறையாய் நிறுத்தேதகண்டு அரைத்தெடுத்து
பார்சேர்த்துயெண்ணெய்விட்டு பையமெழுகுபதம்பிறக்கே ௮௱௰௩

இறக்கியுடல்மிகமுழுது மெங்கும்பூசியுட்கொள்ள
பறக்குஞ்சன்னிப்பிறவிச்சு பகருங்கபோலசன்னியுடன்
விறைக்குஞ்சன்னியுட்புகுந்து மீளாவியாதிதீருமென
மறைக்குமுரியமாமுனியும் வகுத்தகிதமென்றெண்ணீரே ௮௱௰௪

குத்துக்குக் குளிகை.

சீனப்பொட்டணிகட்டியொத்துப்போடவும்.

கோஷ்டந்திப்பிலியரிதாரங் குலவுமிதாம்வெண்காரம்
பேட்டிலவளருங்கெந்தகமு மேவும்நாபிவாய்விளங்கம்

நாட்டில்வளருமக்கிராகாரம் நல்லதான்றிமஞேசிலேயும்
கூட்டுமிளகுஜாதிக்காய் கொடியகிராம்புவசுவாசி ௮௬௫

வாசியேமிலவங்கமஞ்சிட்டிருவிகைச்சோலம்
பேசுந்திப்பிலிமூலமஞ்சள் பெருகும்லிங்கமர்த்தையுடன்
கூசும்பொன்னினரிதாரங் குலவுங்கடுஞ்சீர்நற்சீரம்
வாசம்பெறுநல்லுளுவாவும் வளருமோதமணலுமூனை ௮௬௬

வளருங்கார்புகாசரிசி யாஞ்சில்வெளுத்தபிசிஞுடனே
தளருமிலேயேவோரொன்று சரிசேர்நிறையிற்கழஞ்சிகொள்ளும்
பளகும்வாளங்கழஞ்சிரண்டும் பையக்குமரிச்சாற்றுலே
அளகுபெறவேயரைத்துண்டை யன்பாய்த்திரட்டிக்கொள்வீரே ()

கொள்ளுநொச்சியிலேச்சாற்றில் குத்துஅடுத்தபேர்களுக்கு
மெள்ளசுக்குதண்ணீரில் விரும்பும்வாய்வுக்கிடுவீரே
தள்ளும்வயிறுவீர்சிக்கில் சுடுதண்ணீரில்தான்கொள்ளுந்
தள்ளும்படிநீரொண்ணுதே தணியுந்திருமால்தன்னுணே ௮௬௮

தலைநோய்கபோலத்துக்கெண்ணெய்.

எருகிலம்வேர்சாற்நாழி யெலுமிச்சம்பழச்சாற்நாழி
முருங்கைப்பட்டைச்சாறுவுரி முதியதேங்காய்ப்பாலுமுரி
விரும்புங்கிரும்புவசுவாசி மேலும்வள்ளிச்சாதிக்காய்
சுரும்புமேலமிலவங்கந் துய்யநற்சீரயமோதம் ௮௬௯

துய்யமதுரந்திப்பிலிமூலந் தொடுத்தஅமுக்கறுதிப்பிலியும்
நையுஞ்சாறுகொண்டதிலே நாழியெண்ணெய்தான்விட்டு
பையக்கரைத்துவடித்தெடுத்துப் புகருஞ்சிரசில்பூசுவீராய்
மையைப்புரியுங்குழலாளே மாறுங்கபோலநோக்காடே ௮௭0

திப்பிலியின்குணம்.

ஊண்டவலிக்கும்பல்லடியாலுதிரஞ்சாய்க்குங்குணங்கண்டால்
தாண்டிக்காயுங்கடகசிங்கி தககவுள்ளிபெருங்காயம்
தோண்டவரைத்துவேப்பெண்ணெய் சுருக்காய்க்குடிப்பீருள்ளுக்கு
காண—நார்த்தமிலையதனைக்காடியதனில்வேதுவிடே ௮௭௧

குத்தேதுமிலியின்குணம்.

கன்வலிக்குஞ்சிவக்குக்கனககவுடம்புதான்காயும்
நலம்பெறுங்காயமுள்ளி நல்லவெண்ணெய்நுணைப்பட்டை
விண்புரக்கவேயரைத்துவெந்—மெழுகுபதம்வடித்து
ஊண்பிராசிதசுவியிலிடவோபிசூபுகைகாட்டே ௮௭௨

காட்டேரிபில்லிகுணம்.

வயிறுபிடுங்கும்வலியெடுக்கும் வந்தேயிரத்தஞ் சான்சொரியும்
வயிறுபொருமுங்கீழ்வயிறு வாகாய்த்தொப்புள்தான்வீங்கும்
வயிறுமிகுந்துநோகுமிதற்கு மருந்தாங்கிராம்புபெருங்காயம்
வயிறுசுக்குவுள்ளிசுட்டு வாகாயரைத்துத்தேங்காய்ப்பால் ௮௭௩

தேங்காய்ப்பாலினுட்கொள்ளத் தீருங்காட்டேரிபில்லி
பாங்காய்க்கருங்கம்பிளிமயிரும் பகருமுதர்மாட்டுக்குளம்பும்
தாங்காமலேபுகைகாட்டிச் சத்துமாளைப்புகையில்விட
நீங்காவியாதியெல்லாந்தானில்லாதூரவோடிடுமே ௮௭௪

மண்டைபில்லிகுணம்.

மண்டைக்காதுவலியெடுக்கும் வாகாய்க்காதிலெழுச்சியுண்டாம்
பண்டுஞ்சீயும்விழுந்துமிகப் பகர்மாங்கிஷமும்புறப்பட்டு
கண்டோங்கோழிக்குஞ்சதுபோல் காதிலுலேபுறப்படும்
அண்டுசொன்னேமன்பாக அடுத்தமருந்துமுரைத்தோமே ௮௭௫

உரைத்தாரைந்துயெண்ணெயுட னுற்றகாசயெண்ணெயதும்
பெருத்தகாயங்கெந்தகமும் பேணுங்கிராம்புநேர்வாளம்
வருத்தமானஅரிதாரம் வசம்புதுரிசுபச்சிலையும்
திருத்தும்வேப்பம்பிசின்கூட்டிச் சேரவரைப்பீர்திடனாக ௮௭௬

சேரும்வெள்ளாட்டினுட சிதறுங்கோமியந்தில்லம்பால்
காரும்வெட்டியினுடவுப்பு கருதிக்கூட்டிப்பதத்தெரித்து
சீருஞ்சிரசில்தான்வைத்து செய்யகாதினுள்விட்டு
பாரும்நாலும்நனைத்துமே பதனம்பண்ணிக்கொள்ளீரே ௮௭௭

நடைப்பில்லியின்குணம்.

பிடரிநோகுந்தலைவலிக்கும் பின்னும்வயிறுதான்பொருமும்
நடைசேர்பில்லிக்குணமதுக்கு நாடுமருந்துநீகேளாய்
கொடிசேர்ந்திக்கிழங்குடனே கூறுமுள்ளிப்பெருங்காயம்
வடிவுசேருந்தான்றியுடன் வலம்புரிக்காய்நீரிலரை ௮௭௮

அரைத்துக்கரைத்துப்பசும்பாலி லன்பர்யேழுநாள்குடியும்
உரத்தகோழிமயிருடனே யுதவுமுட்டையிற்கோதுந்
திருத்தமாகப்புகைகாட்டித் தீராநடையின்பில்லியது
வருத்தமாகவோடிவிடு மார்யோருண்மையிதே ௮௭௯

காச்சல்விக்கத்துக்குக்குடிநீர்.

நீரின்முள்ளிதன்னுடனே நீண்டபீலியுமொருபிடியாம்
பாருங்கடுக்காய்மிளகுடனே பார்க்குமிருப்புக்கிட்டமதும்
சீருஞ்பெறவேயனைப்பலங்கொள் செய்யசுக்குவொருபிடியாம்
காருதண்ணீர்நாலொன்றாய்க்காய்ச்சிக்கொடுக்கக்குணமாமே ௮௮௰

மூலக்கடுப்புகழிச்சலுக்கு.

சாதிக்காய்கலாம்புவசுவாசி தருவேர்க்கொம்புமிளகுடனே
நீதிக்கடுக்காய்அபமோதம் நிறமாந்திப்பிலிநற்சீரம்
நாதுவெல்லாமொருநிறைகொண் டிடித்துச்சிலேவடிகட்டி
சோதுபிரண்டைதானிடித்துக் கூட்டிபற்பமொன்றுக்கே ௮௮௧

கூட்டியபற்பந்தன்னைக் கொள்ளுவீர்தேன்தன்னில்
மீட்டுமருந்து அது கொள்ளில்வெருகடியினளவாகும்
நாட்டுமூலக்கடுப்புடனே நல்லகழிச்சலிவைமாறுந்
தீட்டுஞ்சிவனார்தன்னாணை திண்ணமிதுதான்செப்பினோமே ௮௮௨

மூலவாய்வுக்கழிச்சலுக்கு.

மூலவாய்வுக்கழிச்சலுக்கு மூந்துங்கிராம்புவசுவாசி
தாலமகிழும்அதிவிடையஞ் சாதிக்காய்நற்சீரகமுங்
கோலஅத்திதிப்பிலியுங் குணமாங்கஞ்சாவபின்மருந்து
சீலம்பெறவேயோரொன்று சேருங்கழஞ்சியொன்றுமே ௮௮௩

ஒன்றுயெடுத்துயிளம்பதமா யோட்டில்வறுத்துப்பொடிபண்ணி
நின்றுவெருகின்பிடியளவு தானேதின்றுவருவீராய்
அன்றேபோகும்பீலிகையும் அதிகவூஷ்ணரோகமும்போம்
மன்றோறிய மூலவாய்வு வளருங்கழிச்சல்மாறிடுமே ௮௮௪

பீலிகைவல்லையம்—பக்கவிசையம்—வயிற்றில்
சர்வகுன்மத்துக்கும்-குடல்பிரட்டிவலிக்கிறகுன்மத்துக்கும்
குமாரசாபற்பம்.

மானேசர்வகுன்மத்துக்கும் வளருமித்ரம்பலம்பத்து
தேனேமனோசிலைபலமைந்து செய்யலிங்கம்பலம்நாலுந்
தானேகெந்தம்பலமாறுந் தயவாய்நாபிபலமெட்டு
கானேயப்பிரகம்பலம்பத்துங் கருதுந்துத்தம்பலமாறே ௮௮௫

ஆறுந்தூரிசுபலமைந்து அடுத்தபொற்றலைகையாந்தகரை
நாறுஞ்சாகம்வார்த்தரைத்து நாலுநாளும்பதமமைத்து
மீறுஞ்செம்புபூசிவட்டில் மிட்டகத்தில்வேகவைக்க
கூறும்பற்பந்தின்னும்வகை கொள்ளுமிதாம்பலமஞ்சே ௮௮௬

யதமாங்கூகைநீருடனே பகரும்பலந்தானெட்டுக்கொள்
ளிதமாயியம்பலமைந்து மின்னங்காரியம்பலமைந்து

கூடகாக்காந்தம்பலமைமந்தூ தக்கஆலம்வேர்நறுக்கி
கதமாஞ்சூழிக்கல்தான்வார்த்தாக் கனத்தசெம்புவட்டில்பூசே ௮௮௭

பூசிவைத்தாத்தின்னும்படிக்குப் புகழுமிஞ்சிச்சாறிடவும்
வீசும்நறுநெய்தனிற்கொள்ள மிகுந்தவலிக்குப்பற்பங்கொள்
நீசமிந்தபற்பமதை நின்றகுன்றிப்பணவிடைகொள்
கூச்சவேண்டாம்பற்பமதைக் குன்றுபொறுக்கத்தின்பீரே ௮௮௮

தின்பீரந்தப்பற்பமதைத் தின்றுவரண்டால்நெய்வடிக்க
மூன்பேபாகிரிகுவளை முகரும்பெரியவர்கைபின்வேர்
அன்பாஞ்சிறியவழுதுணைவேர் ஆளைநெரிஞ்சிமாவிலிங்கை
கன்பாம்பேரமல்லிசித்தம் நல்லகொடிவேல்வேர்தேடே ௮௮௯

தேடுங்கோஷ்டந்திப்பிலியுந் துய்யகடுக்காய்சீனமுடன்
கூடுமத்திதிப்பிலியுங் கொள்ளுமுஅவாசதகுப்பை
போடும்வெட்பால்விளாவரிசி புதியஅவச்சாற்பெருவாகை
நாடுங்கிராம்புசாதிக்காய் நல்லஅரத்தைமிளகுடனே ௮௯௦

நல்லமாஞ்சில்நாகப்பூ நல்மாங்கழஞ்சுநெய்குறுணி
வல்லபசும்பால்மூக்குறுணி வாகாய்ப்பாலிலேயனைத்து
அல்லறவேநெய்விட்டு அழகாய்வடித்துநெய்யருந்தே
நல்லம்பற்பந்தின்றுவந்தால் நோய்நெய்யையருந்துவதே ௮௯௧

குமட்டிக்காயெண்ணெய்.

செவ்வள்ளிக்காந்தங்கொத்தமல்லி சேர்ந்தகல்லுர்கற்கட்கம்
கொவ்வையிதழால்மூக்கருகூறுங்கருஞ்சீரியிருவியுடன்
கவ்வைமோரிலிருவிதன்னைக்கடுகவூறவேகவைத்து
வெவ்வேறரைத்துசேர்வாளமிகவேசுத்திபண்ணுவீரே ௮௯௨

பன்னும்வாளம்கழஞ்சியது பதினெட்டாகக்கொண்டதுவும்
என்னுங்குமட்டிக்காய்தன்னையிரண்டாய்வெட்டிக்கொண்டபின்பு
நண்ணும்பெரியகொடிக்கள்ளி நல்லபட்டையுடன்போட்டு
திண்ணமாகவேயவித்து செய்யவாமணக்கெண்ணெயுடே ௮௯௩

விடுத்தவெண்ணெயுடன்விட்டு இதவுங்குழம்புபதமிறக்கி
தொடுத்தவெண்ணெய்கழஞ்சிதின்னச்சுகமாவெந்நீர்தான்கொள்ளப்
பொடித்தகுன்மம்பதினெட்டும் போகாவாய்வும்விட்டகலும்
படித்தசிவனார்தன்னுணை பகருங்குன்மமோடிடுமே ௮௯௪

சுத்திபண்ண.

கோட்டாம்பழமூநறுநெய்யுங் கொள்ளுந்தாரிசுந்தேசிப்புளியும்
மட்டாகவேயொன்றாக்கி வருந்திக்கொடுக்கச்சத்திபண்ணும்
முட்டாமடைப்பன்சிரோஷ்டமுழுமிந்துவோடுஞ்சிவனுணை
பொட்டாகசீரொண்ணுதே பொருந்துஞ்சத்தியெடுபடுமே ௮௯௫

பெரும்பாட்டுக்கு.

ஆலங்கொழுந்துமதின்விழுது மானபூளையதின்வேரும்
கோலவாளையின்வேர்பட்டை குணமாம்பசும்பால்தனிற்கொண்டு
ஆலம்புகழும்பெரும்பாடு அற்றேவிழுந்துமாறிவிடும்
காலன்வந்துமுடுகானே கருதுமருந்துபிதுவாமே ௮௯௬

குமட்டிக்காய்க்கடுகு.

கொம்மட்டிக்காயிருபதுதான் கொண்டுவந்துவைக்கோலில்
செம்மையாகக்கட்டியதைத் திரும்பச்சுட்டிரண்டுபடி
வுண்மையாகச்சாறுகொண்டு வுகவுங்குழம்புபதங்காய்ச்சி
நன்மையுடையமிளகுசுக்கு நல்லகடுக்காய்திப்பிலியே ௮௯௭

கடியதான்றிநெல்லிமுள்ளி கனத்தகாயமிந்துப்பு
வெடியுப்புடனேகூவிளையு மேவும்வாளஞ்சவர்க்காரந்
துடிசேர்கடுகுரோகணியுஞ் செல்லுமுப்புகல்லுப்பு
பொடியுமுப்பும்வெண்காரம் பொருந்துஞ்சீனக்காரமுமே ௮௯௮

சீனக்காரம்நவாச்சாரஞ் செய்யகருஞ்சீரோவச்சாரம்
தேனேநற்சீரயமோதஞ் செய்யகடுகுவிராகனெடை
தானேமூன்றுவிராகனெடை தக்கவிளான்விளாகொண்டு
வனேயிந்தகியாழத்தி லொக்கத்தூவிவிளக்கெண்ணெய் ௮௯௯

எண்ணெயுரிவிட்டுக்கிளறியிறக்கிப்பதத்தில்நெல்லிக்காய்
தின்னும்பொழுதுஅந்தளவு சேரும்வெல்லம்சர்க்கரையில்
நன்றாய்ப்பிரட்டித்தின்பீராய் நாடும்வாய்வும்பெறுவயிறும்
சென்னேமைக்கினிமாந்தமுடன் றுய்யகுன்மபீலிகைபோம் ௯௱

பித்தம்சாந்தி.

வட்டத்திருப்பிலிகொடிவேலி வாடுஞ்சுக்குப்பெருங்காயம்
கட்டுந்திப்பிலிமிளகுடனே கடியபஞ்சலவணமுமா
யிட்டசிரங்கொத்தமல்லி மிசைந்தசங்கம்வேருடனே
திட்டமானமோதகமுஞ் செய்யகருஞ்சீரவாசசாரம் ௯௱௧

வேறு

செய்யுமாலங்கிழங்குடனே செவ்வியமாஞ்சாரிடைவேரும்
வையம்புகழத்தூளாக்கி வளருந்தேசிச்சாறரைத்து
நையுங்கழஞ்சிப்பிரமாணம் நன்றாயுண்டைதான்செய்து
ஐயமறவேயொருவுண்டை யசனம்பண்ணுமுதற்கொள்ளே ௯௱௨

கொள்ளேயசலந்தான்செரிக்குங் கூடும்பக்கசூலையும்போம்
மள்ளேவயிற்றுச்சூலையுடன் மகோரசியாமைசூலைகளும்
பின்னேபிறவிமுக்குதலும் பெருகுமுதாமகோதரமுந்
தன்னேகிராணிகவசிகளுந் தக்கசூலைரோகமும்போம் ௯௱௩

நாரத்தங்காய்கடுகு.

வில்விநெரிஞ்சிசித்தமட்டி மேவுஞ்சாரணைவேருடனே
நல்லகடுக்காய்பழங்கிட்டம் நாடுங்காட்டாமணக்குடவேர்
இல்லங்காட்டுக்கருணையுட னிருப்புச்சல்லிபலமிரண்டு
சொல்லுங்காடிக்கோமியமுந் துகளுமோருமுவர்த்தண்ணீர் ௯௰௪

தண்ணீரிதுகளெட்டுமாக்கால் தானேயிந்தமருந்துகளை
சொன்னேமிடித்துஅதில்போட்டுசுறுக்காய்க்குறுணியாய்க்காய்ச்சி
பின்னேவடித்துஅதில்பத்து மேவுநார்த்தம்பழமரிந்து
அன்னேயுள்ளிபலம்பத்து ஆனயிந்துபலம்பத்தே ௯௰௫

பத்தேயிந்தமருந்ததனைப் பகரக்கியாழமாய்க்காய்ச்சி
உத்தேபயித்தியம்வந்தவர்க்கு வுடனேநறுநெய்பலமிரண்டு
சித்தாமணக்குபெண்ணெய்ப்படி சேரவொன்றுகூடவிட்டு
மெத்துமேறப்பொடிபெருங்காய் மேவுஞ்சாதிக்காயுடனே ௯௰௬

உடனேசத்திரவச்சாரமோங்குங்கிராம்புபெவச்சாரம்
திடமாம்புங்கங்கொட்டையுடன் சேருந்திப்பிலிமிளகுசுக்கு
நடனமானகடுவசம்பு நவிலும்பஞ்சலவணமுடன்
அடவாஞ்சாரணைவேர்கடுககா யகிலுமேலஞ்சிறுமூலம் ௯௰௭

ஏலந்திப்பிலிமூலமுட னிசைந்தபெரியதிப்பிலியுங்
கோலத்திப்பிலிசெவ்வியுடன் கொடிவேல்வேரின்பட்டையதும்
ஞாலம்புகழும்நற்சீரம் நல்லகருஞ்சீர்தேவதாரம்
மேலுமாத்தைத்தான்றிக்காய் மேவுநெல்லியுள்ளிமஞ்சள் ௯௰௮

மஞ்சந்திகழுங்கடைமருந்து வராகனிடைதானிரண்டுகொண்டு
மிஞ்சவறுத்துப்பொடிபண்ணி மேவுங்கிட்டம்பலமூன்றுந்
துஞ்சார்கோமூத்திரந்தன்னில் சுருக்காய்மூன்றுநாள்போட்டு
அஞ்சவேண்டாமாப்பொடிதா னனபலந்தான்மூன்றுகொள்ளே ௯௰௯

ஆனபுளியிலேச்சாற்றி லன்பாய்ப்பத்துதரம்வறுத்து
மானேகையான்தகளைச்சாற் வார்த்தேயரைத்துமூன்றுதாந்
தேனேயடுப்பிலேமூடிச் சிறுகவசம்புபுடமிட்டு
தானேபின்புபொடிபண்ணித் தக்கக்கியாழத்தினிற்றாவே ௱

தக்கபதத்திலேபிறக்கித் தான்றிக்காயினளவாக
மூக்கஅந்திசந்திகொள்ளு மோடும்வியாதிதனைக்கேளும்
பக்கசூலைவாய்வெட்டும் பகருஞ்சோகைபாண்டுருவ
மிக்கசிதக்கட்டுடனே விகற்பயிதுகளெல்லாந்தீரும் ௱௧

வெப்புபார்வைக்குகைகண்டது.

சுக்குபத்துபலங்கொள்ளுந் துய்யமிளகுபலமூன்று
மூக்ககருஞ்சீர்கோஷ்டமுடன் ஓமந்தானும்பலமூன்று

மிக்குமுள்ளிபலமிருபதுவு மேவுங்காயம்பலமொன்று
தக்ககருஞ்சீர்பலமரைக்கால்சரியாபோட்டில்வறுத்துயெடே ௬௱௰௨
வறுக்குஞ்சரக்குயெல்லாந்தான் வளரும்காயந்தன்னைவிட
சுறுக்கதாகப்பொடிபண்ணித் துய்யபனையில்கட்டியறும்
நிறுக்கும்பலந்தான்மூன்றுகொண்டு நோயுதிர்த்து வுடன்போட்டு
பெருக்குங்காயமுறக்கியிட்டுப் பிறகுவுள்ளிநறுக்கியிடே ௬௱௰௩
வுள்ளிநறுக்கிவிட்டபின்பு வுடனேயெள்ளிலெண்ணெய்விட்டு
மெள்ளச்சட்டிதனிற்போட்டு விரும்பிப்பிசறிக்காயமாக்கி
துள்ளும்நெருப்பில்வேகவைத்துச் சுருக்காய்க்கலயந்தனிற்புகட்டி
கொள்ளும்வெருகடிப்பிரமாணங் கூட்டும்பத்துநாளைக்கு ௬௱௰௪
பத்துநாளைக்குள்ளாகப் பாரவபிறுதான்களையும்
நித்தம்பிடித்தியல்மாறி நிற்கும்பிருந்துபிலனுண்டா
மற்றுமுடலில்பலபிணியு மாறும்வெந்நீர்தானகுடியுங்
கற்றைச்சடையோன்தன்னானை கருதுமருந்துயிதுவாமே ௬௱௰௫

சோபத்துக்கும்—சுரத்துக்கும்—விஷபாகத்துக்கும்

வட்டத்திருப்பிக்குறிஞ்சான்வேர் வளருஞ்சிறுகாஞ்சொண்டியின்
கட்டகாண்டைவேருடனே காவட்டம்புல்லுங்காவளைவேர் (வேர்
தொட்டபுன்குவேர்பட்டை துடருமுருக்கம்பட்டையுடன்
இட்டகொன்றைப்பட்டையுட னிசைந்தபாவட்டம்வேர்தேடே ()
தேடேவேப்பமிலைத்தண்டுஞ் செப்புப்பிசண்டைத்தண்டுடனே
நாடாய்ப்பிர்திரிப்பட்டையுடன் நாய்வேளைவேர் கூவிளைவேர்
கூடாய்மண்ணிச்சமூலமுமாம் கூவிளைவேருஞ்சுண்டிதண்டும்
ஈடாமாமலைத்தண்டுடனே யிலைபுங்கோவைத்தண்டுடனே ௬௱௰௭
கோவேபூசினித்தண்டு கொள்ளுஞ்சுணையிற்றண்டுடனே
நாமேசொன்னேங்கற்றாழை நாத்தமிலைகிழ்நெல்லிசமூலம்
போமேநீரின்முள்ளியிலை புகழுமல்லியிலையுடனே
தாமேகொட்டைப்பாசியிலை தருமாமரந்துத்தஞ்சாறுவரி ௬௱௰௮
உரியச்சாறுஅதுதனிலே யுற்றேயரைத்துக்கடைமருந்து
கரியசீரம்நற்சீரங் கடியஅரத்தைசதகுப்பை
அரியதிப்பிலிதேவதார மானமஞ்சிட்டிவசம்புள்ளி
தெரியுங்கோஷ்டமரமஞ்சள் செவ்வியமதுரஞ்சிறுமூலம் ௬௱௰௯
மதுரமானயெண்ணெய்க்கு வகையாஞ்சரக்குவேமொன்று
அதிகமாகக்கழஞ்சியெட்டு ஆனசத்திசாரணைக்கிழங்கு
பதிசேரமுககூஞ்சித்தமட்டி பகர்நன்னாரிசாரணைவேர்
புதியவுத்தமாகாணி புகழும்வட்டத்திருப்பியின்வேர் ௬௱௨௰
வட்டக்கொழிஞ்சிவேர்திமட்டியின்வேர் வளர்திப்பிலியுங்கிழாநெல்
இட்டவேர்கள்கழஞ்சியிதுவுமரைத்துத்தான்கரைத்து (வீ

பொட்டபெறுவாயன்சாறும் பொன்னேமெழுகுபலமிரண்டே
இட்டுக்காய்ச்சிவடித்தெடுத்து யிந்தக்கியாழந் தனிற்கலந்தே ௩௨௧

கலந்தேயெண்ணெய்தான்விட்டுக் காய்ச்சிவடித்துப்பூசிநக்க
பலந்தானுண்டாவீக்கமுற்போம் பிறகுசோபந்தான்றீரும்
தலந்தான்மகிழுந் துநக்குவீராய் தக்கக்குடிநீர்வகைசொலக்கேள்
நிலந்தான்புகழுங்கொத்தமல்லி நெடியஅரத்தைமரமஞ்சள் ௩௨௨

மஞ்சந்திகழுநாய்வேளை வளரும்பிரண்டைச்சாரணையும்
அஞ்சவேண்டாநீர்விட்டு அழகாய்க்காய்ச்சிக்குடிப்பீராய்
மிஞ்சுஞ்சோபஞ்சுரம்வீக்கம் மேவுமுடலில்நில்லாது
கெஞ்சுமிதுதான்விட்டோடுங் கேளுஞ்சிவனார்தன்னாணை ௩௨௩

குன்மத்துக்குத்தேங்காய்க்கடுகு.

குன்மங்காணுங்கொல்லாது கொடியகடியவியாதிகண்டீர்
கன்மங்காணுமோடாது கள்ளிப்பாலுமிந்துப்புந்
தென்னங்காயினுள்ளிட்டு தீயச்சுட்டுஆறியபின்
புன்னங்காயில்பாதிகொள்ளப் போகுங்குன்மம்போய்விடுமே ௩௨௪

நீர்முள்ளிசெம்முள்ளிசிந்திற்றண்டு நெடியஆடாதோடையின்வேர்
கார்சேர்வட்டுவேருடனே கடியுவாளம்சுரைதகண்டு
கூர்சேர்வவ்வாலொட்டியுடன் கொடியபிரமிகொத்தமல்லி
சீர்சேர்நிலையாவிராட்டியுடன் செய்யகடுக்காய்வேர்கொம்பே ௩௨௫

கடியவுள்ளிநற்சீரங் கருதுமோதந்திப்பிலியும்
அடிசேர்மிளகுகருஞ்சீரந் துய்யசாக்குவொருநிறையாய்
படிகொள்தண்ணீர்தான்வார்த்து பகரக்கேள்நாளொன்றுக்கு
விடவேயந்திக்குடிப்பீராய் வீக்கஞ்சுரங்கள்விடவோடும் ௩௨௬

காமாலைக்குச்செய்யுங்குணம்.

கண்டங்கணக்குந்தலைநோகுங் கனைத்தயிளைப்புமுண்டாக்கும்
பண்டேயசனமகற்றுவிக்கும் பகருங்கடுக்காயிருபதுகொள்
செண்டேகாந்தம்பலமூன்று செய்யகிட்டம்பலமிரண்டு
விண்டேசமரப்பொடிபலமூன்று மேவுநீலம்பலமொன்றே ௩௨௭

நீலஞ்சேர்தான்றிகருஞ்சீரம் நேராயாதுகாசெடைகொள்
கலந்தேமமிர்தங்காசெடைநாலு கருதும்புளியிலைச்சாறு
பிலந்தானுடையகுப்பைமேனி பெரியகாயுந்தகரையுடன்
தலந்தான்புகழுமெவ்வொன்று சாறுமுன்னாழிதான்கூட்டே ௩௨௮

கூட்டுங்கேசிக்காய்தானுங் குலவும்நாற்பதெனலாகும்
மீட்டும்புளிவிட்டேயரைத்து மிகவுமெட்டுநாளூறி
ஊட்டுமொன்பதாநாளி லெக்கக்காய்ச்சிவுண்டைபண்ணி
தீட்டுகாசினளவாக செய்நாற்பதுநாள்தின்பீரே ௩௨௯

காய்ச்சி ஆறவைத்த தண்ணீர் குடிக்க குளிக்கவும்.

தின்னும்பிறருபத்தியங்கேள் செய்யபசும்பால்நெய்முருங்கை
உண்ணும்பசளையிலையுடனே வுப்புபுளிதான்விட்டுவிடும்
சொன்னேம்வயிறுகழிந்தாக்கால் துய்யமிளகுநீர்கூட்டு
நன்றாய்த்தண்ணீர்தான்காய்ச்சி நயமாயாறவைப்பீரே [illegible]

ஆறேயோடிவயிற்கழியி லழகாமவரியின்கீற்றுழை
சாறேயெடுத்துநீர்ப்பூலா தக்கவேளைகதானைத்து
கூறுந்தேசிக்காயினுட குணமாம்புளியிட்டேகுழைத்து
நீறுமதலையிற்றுப்பிவைக்க நோரந்தண்ணீர்குடிகுளியும் [illegible]

உள்ளியாமணக்கெண்ணெய்.

உள்ளியாமணக்கெண்ணெ யுனைக்கக்கேளுமடமயிலே
விள்ளுநங்கூவிளைவேருங் குமிழும்முன்னைபாதிரியும்
தெள்ளுஞ்சித்தாமணக்குடனே சிறுவழுதிலைகொடிவேலி
கொள்ளுஞ்சித்தமல்லிபோமல்லி கொண்டுபிவைமேயசரிநிறையே ()

நிறையேயுள்ளிமுப்பதின்பலமாம் நோராமுள்ளிமுப்பதின்பலமா
மறைசேர்திப்பிலிமிளகுவாகாய்நெல்லித்தான்றிககடுக்காய்
இறையுமேலம்விளாவரிசி யெடுப்பீர்கழஞ்சுபத்தாக
கறைசேர்நாழித்தண்ணீரும் நாழிவார்த்துநாளொன்றாய் [illegible]

ஒன்றாய்க்காய்ச்சிந்தநீரிலுதவவரைத்துக்கடைமருந்து
நன்றாஞ்செவ்வியாணுகமும் நாடுமத்திதிப்பிலியும்
கொண்டோம்பெரியகாயமுடன் கூறுஞ்சிறியமூலமது
கண்டோமொக்கவொருபலங்கொள் கடுகவரைத்துக்கணமருந்தே ()

மருந்தாமணக்குமெண்ணெய்நாழி வாகாய்க்கள்ளிப்பாலுமுரி
திருந்தாயிதுகள்தான்புகட்டி செய்யமெழுகுபதம்வடித்து
இருந்துஇருநோமருந்தாயிதுகுன்மம்குடல்வாதம்
பிரிந்தேசூலைபெருவயிறு போகுமேகுத்துவாய்வகளும் [illegible]

பறங்கிவியாதிமாறலுக்கு.

சிறுகாஞ்சொண்டிபற்படகம் செய்யசுக்குநிலவேம்பு
குறுகாகோஷ்டந்திப்பிலியுங் கொள்ளுஞ்சிந்திற்றண்டுடனே
சிறியவிழுதிநிலவேரும் சேரவொன்றுவொருபலமாய்
நிறையுநாழிதண்ணீர்விட்டு நோயுறக்காய்ச்சியிடே [illegible]

பறங்குவியாதியதுதனக்குப் பகருஞ்சிறுதேக்கொருபலங்கொள்
திறஞ்சேர்குடிநீருட்கொள்ளத் தீராப்பறங்கிரவசரமும்

இறுக்குமாறல்நாள்மூன்று யிரண்டுநாளேர்சுரம்போமே
அறஞ்சேர்சிவனார் தன்னாணை ஆருப்பறங்கிமாறிடுமே கூஙஎ

காயாசுவாசத்துக்கு.

மிளகுசுக்குதிப்பிலியு மேவுங்கிட்காய்நெல்லியுடன்
பளகுஞ்சிறியதேக்குடனே பகருங்கண்டங்காலியிவை
அழகுபெறவேயிவையொன்று ஆன்கழஞ்சிதான்கொண்டு
இளருந்தண்ணீரிருநாழி யிட்டேகாய்ச்சிக்கொள்விரோ கூஙஅ

தானதுநீறிவெள்ளைச் சதுர்முகன்போலேயாகும்
மானதோர்நீரதன்னை மண்டலந்தன்னிற்கொள்ள
ஏனமாந்தேனினோடு எளநீரில்தானருந்த
மானமாங்கோதையாளே மகன்றிடும்வியாதியெல்லாம் கூஙகூ

அகன்றிடுமிருமற்காசம் அதிகமாம்சூலைநோவு
புகன்றிடமுடியாதப்பா பொல்லாதயிந்தநீற்றை
செகந்தனிற்செய்யமாட்டார் செப்பினேனுலகத்தோர்க்கு
நிகண்டதுபோலாமிந்த நுணுக்கநூலறிந்துபாரோ கூசய

பார்க்கவே நுணுக்கமாகப் பதிவோடுபவளப்பற்பம்
ஏர்க்கவேவுலகிலுள்ளோர்க் கிதம்படவுணர்க்கவென்று
மார்க்கமாயிருந்துகொண்டு மாளாதவித்தைதனை
தீர்க்கமாயிருந்துகொண்டு திறமுடனுடலாமே கூசக

வைரப்பற்பம்.

ஆடலாம்வயிரந்தன்னை அறையவேயுரைக்கக்கேளும்
பேடைகளசுரோணித்த பேணிவார்த்தணத்துப்பில்லை
நாடதாயுலர்த்திக்கொண்டு நன்மையாயோட்டில்மூடி
தேடியேகெசப்புடத்தில் தீர்க்கமாய்நீறிப்போமே கூசஉ

நீறியநீற்றெல்லாந்தான் நினைவுடன்றேனிற்கொள்ள
ஆறிடுந்திரேகமெல்லாம் அகண்டிசுவியாதிநோவும்
மாறிடும்சரீரம்நீங்கி வச்சிரகாயமாகும்
கூறிடும்ரத்தமெல்லாம் கெட்டியாயிருக்கிப்போமே கூசங

இரத்நாதிவைரபற்பம்.

கேளதுபள்ளப்புற்றை கெட்டியுரயணத்தாக்கொண்டு
ஆளதுகுகையாய்ப்பண்ணி யதனுள்ளேரத்நம்வைத்து
சூளதுசில்லுமேபோட்டு சுற்றியேசீலைசுத்தி
நாளதுபுடத்திற்போட நவின்றிடநீற்றிப்போமே கூசச

போமதுநீரிற்றானால் புவிதனிற்காட்டவொண்ணா
தாமதுரத்தினம்நீறும் தன்மையாய்ச்சித்தர்செய்வார்

நாமதுதிறந்துசொன்னோம்நாட்டினில்மானிடர்க்கு
ஆமிதுவனுபானங்களறிந்திடவுறுதியாமே கூசரு

உறுதியாமிந்தநீற்றாலொழிந்திடும்வியாதியெல்லாம்
அறுதியாம்பாஷாணத்திலறையவேயுரைக்கக்கேளும்
சுருதியாமண்டத்தோடுசுண்ணமாய்ச்செய்துகொண்டு
கருதியேகுகைபிடித்துக்காட்டியேயுள்ளேவையே கூசசு

சங்குப்பாஷாணபற்பம்.

உள்ளவேவைத்தபின்புவெள்ளெருக்கதனைப்பிசி
மெள்ளவேயாணிப்பாலையிட்டுமேசில்லுபோட்டு
தள்ளவேசீலைசெய்துதனிப்புடம்கோழியாக
மெள்ளவேயிடுவாயானால்மாசற்றபற்பமாமே கூசஎ

பற்பத்தினிடையேசூதம்பாங்கதாய்முலைப்பால்விட்டு
நற்புடனரைத்துப்பில்லைநன்மையாயுலர்த்திக்கொண்டு
உற்பனக்குகைக்குள்வைத்துஒழுங்குடன்சீலைசெய்து
கற்பகமாதேபோற்றிக்களிப்புடன்கருதிக்கொள்ளே கூசஅ

கொள்வதுபற்பம்நன்றாய்க்கொள்வதுவெள்ளியத்தில்
அள்ளவேபலந்தனக்குஅரைப்பணவிடையதாக
உள்ளவேயுருகும்போதுகொடுத்திடநீரைவரங்கும்
மெள்ளவேதுய்யவெள்ளிவிலையதற்கதிகந்தானே கூசகூ

தானெனவியாதிக்கெல்லாந்தன்மையாய்த்தாக்கினுக்கால்
கூனெனநாழிகைக்குள்குளிர்சுரமோடிப்போகும்
நானெனஇந்தநீற்றைநாட்டினிலுரைக்கொணாது
பானெனத்தெளிந்துநூலைப்பதனமாய்வைத்துப்பாரே கூருய

உப்புப்பற்பம்.

உலகத்தினுப்புப்பற்பமுரைக்கிறேனுறுதியாகத்
திலமுளவுப்புக்கட்டிதிறமதாயொன்றுவாங்கி
மலமுளஇச்சிப்பட்டைமாவதைத்தூளதாக்கி
நிலைமையாயோட்டில்வைத்துநிலைபெறச்சீலைசெய்யே கூருக

செய்யவேகட்டிமேலேசிறந்ததாஇச்சித்தூளை
உய்யவேகீழ்மேலிட்டுவுபாயமாயோடுமூடி
பையவேசீலைசெய்துபதிந்தகாடைப்புடமாய்
மெய்யவேபோட்டாயானால்மேலானபற்பமாமே கூருஉ

பற்பமாந்தனையருந்திற்பறந்திடும்வியாதியெல்லாம்
உற்பமாயோடிப்போகுமோங்கியவாயுகுலை
கற்பமாமகோதரங்கள்கனத்திடுநீர்த்தோஷங்கள்
துற்பமாயோடிப்போகுஞ்சொல்லுதற்கின்னமுண்டோ கூருந

உண்டெனவுரைத்தவார்த்தைவுறுதியாயறையக்கேளும்
மிண்டர்கள்போலாமிந்தவதிசயமுப்புநீறு
எண்டிசைமுழுதும்வாழ்த்தவியம்பினேனிந்தநீற்றை
உண்டிடாவிமிதியிலொருபணவிடைதானீயே ௩௫௪

ஈந்திடவயதேறாகுமிழைத்திடமாணிக்கெல்லாம்
தேய்ந்திடப்புடமிட்டாக்கால்சிறந்ததோர்தங்கமாகும்
காய்ந்திடும்கசடருக்குக்காட்டாதேயிந்தமார்க்கம்
வாய்ந்திடும்பெரியோர்க்கிந்தால்வருவதுதருமந்தானே ௩௫௫

சாரபற்பம்.

வைத்திடுஞ்சாரநீற்றையைந்தனேமகிழ்ந்துகேளாய்
எற்றிடுமுருவிச்சாம்பலெடுத்ததைதயுப்பாய்க்காய்ச்சி
சற்றிடும்கஞ்சாங்கோரைச்சாறுவிட்டரைத்துநன்றாய்
அற்றிடும்குகையுண்டாக்கியதனுளேவைத்துமூடே ௩௫௬

மூடியேகுகையிலிட்டுமூசியவேசீலைசெய்து
ஆடியபுடத்தில்நீறுமழகதாய்வெண்மையாகும்
தேடினூற்கிடையாதிந்ததிறமுள்ளசாரபற்பம்
வாடிடும்வாதியானல்வகையுடனீற்றுவானே. ௩௫௭

நீற்றுவான்வாதியானல்நிசமதாய்ச்சாரநீறு
மாற்றுவான்கொண்டவாதிமகாசாரநுணுக்கம்கேளு
தூற்றுவானுகந்தானும்துடிப்புடனிறந்துசாகும்
காற்றுவான்பெரியவாதிகசடறத்துணிந்துபார்ப்பான் ௩௫௮

பார்க்கவேநோய்கள்தீரப்பாய்ச்சிடுந்தேனிலேதான்
தீர்க்கவேமகோதரங்கள்திரட்சியின்வாய்வினோடு
நீர்க்கவேயாம்பல்வீக்கம்நீடியகர்ப்பரோகம்
மூர்க்கமாம்குன்மமெல்லாமுயன்றுமேயோடிப்போமே ௩௫௯

சமுத்திராமையோட்டினீர்.

ஆமையோடிதனைநீற்றஅருடனைசொல்லக்கேளு
சாமைவேர்தனையரைத்துச்சட்டமாய்க்கவசஞ்செய்தே
வாமையாயதனுள்வைத்தேவடிகதாய்ச்சில்லுபோட்டு
தாமையாய்க்குக்குடத்திற்றண்மையாய்நீறிப்போமே ௩௬௰

நீறியநீற்றையெல்லாநிதம்பெறவுலகுளோர்க்கு
கூறியேதேனிலிட்டால்கொடியகண்ணோய்களாறும்
மீறியேயோடிப்போகுமூடியகண்ணோய்தீரும்
காறியமிந்தநீறுகாசினியில்லைதானே ௩௬௧

ஆணிமுத்துநீறு.

தானெனஆணிமுத்துநீற்றவேதாணியோர்க்கு
மானெனஅண்டநீரால்மதித்தரைத்துண்டைசெய்து
நானெனக்குகையிலிட்டுநன்றதாய்ச்சீலைசெய்து
வானெனக்குக்குடத்தில்வண்மையாய்ச்சுண்ணமாமே ௯௱௨

சுண்ணமாமுத்துநீரைவெற்றிலைதன்னிற்பூசி
திண்ணமாய்த்தாம்பூலத்தைத்திறமுடனருந்திளுக்கால்
வண்மையாய்ப்பல்லிறுகும்வாசானகுளிர்ச்சிநீங்கும்
தண்மையாய்மேனிதானும்தளர்விலாதிறுகுந்தானே ௯௱௩

வாய்த்திடும்பிரமேகங்கள்வந்தநீரிழிவுதீருஞ்
சாய்த்திடும்கற்பூரத்தைச்சாற்றுவேன்சுண்ணமாக
காய்த்தகற்பூரவள்ளியிலைதனையரைத்துஉண்டை
தோய்த்திடும்வட்டதாக்கிரவியினிற்காயப்போடே ௯௱௪

போடவேயொட்டிலிட்டுப்புகழ்ச்சியாயோடுமூடி
மூடவேசீலைசெய்துமுக்கியபுடந்தான்கோழி
கா்டவேயெடுத்துப்பார்க்கக்கனமுள்ளசுண்ணமாகும்
ஆடவெற்றிலையிற்றின்றால்அதிவச்சிரகாயமாமே ௯௱௫

காயமும்வலுத்துப்போகும்கசடதுமாறிப்போகும்
வாயினில்ரோகந்தீரும்வருந்தியாசைபோகும்
மாயமாம்காசமாறும்மலசலக்கட்டுப்போகும்
நேயமாய்க்கண்துலங்கும்நிச்சயமாகச்சொன்னேம் ௯௱௬

மயில்துத்தபற்பம்.

நிச்சயமாகச்சொல்வேன்நீலமாந்துரிசிபோக்கு
வைச்சதோர்வங்கத்தோடேயிடைக்கிடைசூதஞ்சேர்த்து
மெச்சுமந்திடைக்குநல்லவெடியுப்புச்சரியாய்ச்சேர்த்து
உச்சதோர்பழச்சாற்றாலேயுறுதியாயரைத்திடாயே ௯௱௭

அரைத்திட்டுஒட்டில்வைத்துஅழகதாய்ச்சீலைசெய்து
நிரைத்திடக்குக்குடந்தானிறமதாய்நீறிப்போகும்
முறைப்படிசிவந்துபோனால்முன்போலவுப்பைக்கூட்டி
திரைப்படியரைத்துமுன்போல்திறமதாய்ப்புடத்தைப்போடே ()

போட்டெடுசுண்ணந்தன்னைப்புகட்டியேயரைத்துக்கொண்டு
மாட்டிடுதுருககப்பிமறையாமல்சவியிற்போட
மூட்டிடுமூன்றுநாளில்முசியாமல்வெள்ளையாகும்
போட்டிடுசீலைசெய்துபொருந்தவேபுடத்தைப்போடே ௯௱௯

போட்டுமேயெடுத்துப்பார்க்கவியலுள்ளசுண்ணமாகும்
காட்டுமேகண்டுபார்க்கக்கலியெலாம்நீங்கிப்போகும்
பாட்டுமோசத்திற்குக்கால்பணவிடைகொடுத்தாயானால்
ஓட்டுமேகொண்டுபோமேயுறுதியாம்வாய்நீராலே ௬௭௰

வாயினிலுமிநீராலேமத்தித்தேயுருட்டிமெள்ள
காயவேகுகையிலிட்டுக்கடுகவேயுருக்கிக்கொண்டு
தாயினிலாயிபாதம்தன்னையேவணங்கிக்கொண்டு
ஆயினிலிருந்துகொண்டுஆடலாங்கோடிவேதை ௬௭௧

வேதையென்றுரைத்தேன்கேளாய்வெகுகோடியிதற்குள்ளாகும்
வாதிபேமயங்கவேண்டாம்வைத்திடுகுருசுகண்ணம்
மேதையில்கிடையாதப்பாவெகுகோடிநாட்சென்றாலும்
காதையாம்படித்துமென்னகாசினிநூற்கிட்டாதே ௬௭௨

கிட்டாமற்போனதேதோகிடைத்தவர்கொடுக்கமாட்டார்
கட்டாக்இருந்தபேர்கள்காலினில்விழுந்துபோற்றும்
செட்டாகவிருக்கலாகாதிரவியஞ்செய்வதென்ன
முட்டாளாய்ப்போகாமற்றுன்முறைப்படிகுருவைவாங்கே ௬௭௩

நிமிளைப்பற்பம்.

வாங்குபொன்னிமிளைபற்பம்வளமதாய்ச்சொல்லக்கேளு
தாங்கியேயிச்சிப்பட்டைதூளதாயிடித்துக்கொண்டு
காங்கியேநிழ்மேலிட்டுக்கட்டியோநடுவேதூக்கி
ஓங்கியவோட்டிலிட்டுஒழுங்கதாய்ச்சீலைபோடே ௬௭௪

போடவேசீலைசெய்துபுகழ்ச்சியாய்க்கெசபுடத்தில்
சாடவேநீறிப்போகும்தவளம்போல்வெண்மையாகும்
கூடவேவாயுரோகம்கொடிசூலைந்தோடிப்போகும்
நீடவேகுன்மமெட்டுநிலையாமலோடுந்தானே ௬௭௫

தானெனச்சூலைகட்குத்தனிகண்டபிருதிமாலை
ஊனெனவரையாப்புத்தாளுேங்கியதேனிற்கொள்ள
ஆனெனத்தங்கநீற்றையழகதாய்வேதைசொன்னேன்
கானெனவுலகுளோர்க்குக்கட்டதாயுரைத்தவாறே ௬௭௬

வாயுவெண்பதுக்குச்சூரணம்.

வாய்வுதானென்பதாகும்வருகின்றசூலைவாயு
சீதமாய்போடும்வாதஞ்சிறந்தபாரிசுவின்வாதம்

சூதமாநடக்குவாதம்சொல்லியசந்துவாதம்
போதமாமருந்துதீரப்பொருந்தியமருந்துகேளே கூளஎ

கேளேதான்சித்திரமூலம்கெடியானகொன்றைமல்லி
தேளேதான்முருங்கைசங்குதெவிட்டாதஅறுகுவெள்ளை
பாளேதாமெருக்கம்பூவும்பகர்ந்ததிப்பிலிமரீசம்
காளேதான்லவணமஞ்சள்கனமதாயுண்டுசாரே அளகூ

மேலுக்குத்துவளைத்தயிலம்

கொள்ளவேவேம்பினெண்ணெய்குலவுதில்லைப்பால்கற்கம்
விள்ளவேமுசலின்காதுசீனிகைவிலிங்கைமூலம்
கள்ளவிழ்காயம்திப்பிலிகடியதோர்வசம்புவலம்
மெள்ளவேயெரித்துப்பூசித்தொக்கிடஞ்செய்துபாரே கூளகூ

நாற்பது பித்தத்துக்குச்சூரணம்.

செய்யவேசெப்பக்கேளும்சிறந்திடும்பித்தம்தன்னை
அய்யவேபிரமையோடுமெதிகமாம்நடுக்கல்வாந்தி
மெய்யவேசுழற்றல்வாயுவுடம்பெலாஞ்சித்தப்பிரமை
தையலேயிதுதனக்குச்சாற்றிடுமருந்துசொல்வேன் கூஅ௰

சொல்லியமதுரம்கோஷ்டம்தொடர்ந்திடுமேலமாஞ்சில்
மெல்லியகிராம்புதிப்பிலிமேன்மையாய்நெல்லிக்காயும்
புல்லியதாளிசந்தான்பகருசீரகமுநாகம்
வல்லிசர்க்கரையும்கூட்டிவகுத்துமண்டலந்தான்கொள்ளே கூஅக

பித்தத்துக்குக்கைகண்டதயிலம்.

பரிந்துநெய்யெண்ணெய்பாலும்பருத்திடுநெல்லிச்சாறும்
திரிந்திடுபோன்னாங்கண்ணிசிறந்ததோர்முசுமுசுக்கை
வருந்தியசிட்டமேலம்மரமஞ்சள்சிரமோமம்
பொருந்துசண்பகப்பூகிராம்புபுனைந்தெரிதலைக்குவாரே. கூஅ௨

சன்னிக்குடித்தயிலம்.

வார்பெறுதனத்தாள்கேளும்வளர்ந்திடுஞ்சன்னிக்காக
பேர்பெறுசுவாசகாசம்பெரியதோரிரத்தபித்தம்
சீர்பெறுமிருமலீளைதெறித்திடும்கபரோகங்கள்
தார்பெறுசூரமுண்டாகும்தக்கதோர்மருந்துசொல்லே கூஅ௩

தயிலச்சரக்குகள்

தனதுபொன்னுவாரையும்தாக்கியதிரிகோடேலம்
மனமுறுதேக்குசிங்கிவாலுழுவரிசியிந்து

கனமுறுநாகம்கண்டம்கத்திரிகோஷ்டமோடு
நினைவுறுசிமூர்த்தம்நீங்கிடத்தயிலமூழ்கே ௯௮௪

சிலேட்டுமத் தயிலம்.

எரித்தநெய்பாலும்கண்டமெலுமிச்சம்விலாமிச்சோடு
தரித்திடு அகிலின்பட்டைதாக்கியசந்தனத்தூள்
உரித்திடுஞ்சிந்தில்முத்தமுயர்ந்தநன்னாரிவேரும்
பருத்ததோர்தண்ணீர்மிட்டான்பகர்ந்தெரிதலைக்குவாரே ௯௮௫

மூலத்துக்குச்சூரணம்.

தனக்குறாரத்தமூலம்தாங்கியபித்தமூலம்
மனக்குறுவைபமூலம்வாதமாஞ்சிமிழின்மூலம்
சினக்குறுவுள்மூலந்தான்சீழ்மதக்குமுதமெல்லாம்
கனத்துடன்மருந்துசொல்வேன்காரிகைகேட்டிடாயே ௯௮௬

கன்னியின்சாருகோஷ்டம்கருணையாம்பெருத்தசுக்கும்
வன்னியாங்கண்டாய்கத்திரிவளமுடன்சித்ரமூலம்
பன்னியமாவிலிங்குபிரண்டைதானாலைகூட
துன்னியஆவின்பாலில்சூரணஞ்செய்துவுண்ணே ௯௮௭

கிராணிக்குமருந்து.

இன்பமாயிடிம்புகாயமிந்துப்புவளையலுப்பு
அன்புடன்சுக்குஉள்ளியழகியகோஷ்டம்திப்பிலி
தன்பெறச்சவுட்டுமண்ணுதாக்கியவோமமஞ்சள்
பன்னியபிரமிச்சாற்றால்பதிவுடன்மருந்துகொள்ளே ௯௮௮

தைலமுறை.

தாமிதுமருந்துகேளாய்தரும்பூரைக்காந்தைதானும்
ஆமிதுமுத்தம்கோஷ்டமலைகடல்கிரந்தைமாஞ்சி
ஓமதுகொன்றையோடுவுகந்தபாதிரியுநாவல்
போமிதுகாச்சர்காய்ந்தபொருந்தவோர்மதுரமீயே ௯௮௯

மதுரஞ்சந்தனம்கிராம்புமகிழ்பச்சைநாவற்பூவும்
சதிர்பெறுலவங்கப்பட்டைதனித்ததோர்மாஞ்சில்பூரம்
கதிரிலாக்கோரைதானும்கணக்குடன்சிந்தில்சேர்த்து
எதிரிலாஎண்ணெயாகஇளம்பசுமிறக்கிமூழ்கே ௯௯௰

மகோதரவரலாறு.

கருவதையழிக்கும்கர்ப்பகர்ப்பவிப்புருதிதானும்
உருவமாய்ப்பீலிகோவையுதரத்தின்சூலைதானும்
பருவமாம்கவுசியோடுபக்கவிப்புருதிசாலம்
பெருவயிறுடனேமற்றப்பெருமகோதரமுந்தானே ௯௯௧

தூதுவளைநெய்.

கடுகுரோசனைகொத்துமல்லிகடுகுரோகணிதிப்புலியும்
முடுகுமதுரம்நாகப்பூமிளகுசுக்குதானிரண்டு
அடுகுசந்தனமீரைந்துஅழகாயிடித்துத்தான்பிசறி
கொடியபசுவிளைப்விட்டுக்கொடுக்கவியாதிபறந்திடுமே ௬௬௨

புளியிலைக்குழம்பு.

புளியிலையும்காடியுமாம்புகழும்கையாந்தகரையுடன்
குளியும்வங்கப்பத்திரியும்குப்பைமேனிமுருக்கிலையும்
தெளியும்பிரண்டைநொச்சியிலைசேர்த்துச்சிட்டம்பலநூறு
ஒளிசேர்காடிதன்னிலதையூறமூன்றுநாள்போட்டே. ௬௬௩

ஊறியெடுத்தேயதன்பிறகுவுழக்குஈயப்பொடியுடனே
தேறும்கடுக்காயரைப்பொடியும்தேர்ந்தேயெடுத்துக்கூட்டியபின்
மாறும்கடுகுரோகணியுமாசீர்காயம்வெள்ளுள்ளி
ஆறும்பிரமிதன்னிலையுமழகாம்வசம்புசிற்றரத்தை ௬௬௪

துவளை.

சித்தமகிழும்பேரரத்தைசெங்கத்தாரிசதகுப்பை
ஒத்தகறுவாப்பட்டையுடனுள்ளிப்பூண்டுஅதிவிடயம்
மெத்தக்காட்டுச்சீரகமுமேவும்தும்பைசின்னியுடன்
பத்துமோதமொவ்வொன்றுபலமேகால்தான்கொள்வீரே ௬௬௫

பலஞ்சேரோரிதழ்த்தாமரையும்பச்சையரிசிதன்னுடனே
கலஞ்சேர்கம்புதான்சேர்த்துக்காசுக்கட்டிதன்னுடனே
வலஞ்சேர்காடையின்மலமும்வாகாய்க்கூட்டியரைத்திடிலே
பலஞ்சேர்மெழுகாம்பதம்வடித்துப்பாங்காய்த்துவளைசெய்வீரே. ()

கூட்டுஞ்சரக்குச்சேரொன்றுகொள்ளீர்கோஷ்டமத்துடனே
நாட்டில்வளருஞ்செண்பகப்பூநல்லதிப்பிலிமாசக்காய்
மீட்டுஞ்சரக்கிலிடையொன்றுமிகவேபிடித்துத்தூள்பண்ணி
காட்டும்கற்றாழஞ்சோற்றிற்கடுக்காய்போட்டுத்தெளியவையே ()

தெளியும்தண்ணீரொருகாண்டி சேரும்படியாமணக்கெண்ணெய்
பொளியுஞ்சரக்குளெண்ணெய்தனிற்போதவிட்டுக்காய்ச்சியதை
நளியுமொருதுட்டெடைகொடுத்துநன்றாய்மேலும்தான்பூசி
அளியும்வியாதிகடினமென்றாலதிகமாகக்கொள்வீரே ௬௬௮

அதிகமானகணம்ஞ்சுமக்ரமானவியாதிகளும்
மதிசேருடலில்நில்லாதுமாந்தமறுமேவியாதியும்போம்
பதிசேருலகுபாலகர்க்கும்பகர்ந்தோம்புளிகைப்பிணிப்பாகா
துதிசேர்கிரந்திகூட்டியதோர்சொன்னேமுண்மையாகாதே ௬௯௯

பித்தத்தில்வெப்புக்குணம்.

பித்தமதில்வெப்புகொள்ளில்பெருத்திடும்குளிர்ச்சிதானும்
உற்றுமேநோவுவந்துமுட்கழிச்சதிகவீக்கம்
மெத்துமச்சுரங்கள்நீர்கள்மேவியவேர்வையுண்டாம்
கைத்துமப்பித்தம்வந்துகதித்துமேகீழேசாடும் ௭௱

கீழேநின்றவாய்வுகள்கிளர்ந்துமேமேலேநோக்கிடுகில்
நாளேநல்கிமீளாதுநன்றாய்மேமேலேநின்றாட
தாளேவீங்காமகோதரம்கண்ணீர்வீங்கியதிகமுமாம்
மீளாதிதுவேதிண்ணமென்றுவிரைந்துமருந்துசெய்வீரே ௭௱௧

கண்ணேமுகங்கள்கழுப்பிட்டுக்கைகாலோடுவீக்கமுமாய்
தண்ணீர்தாகமிகவுண்டாய்த்தங்காத்தாகமாறாது
விண்ணேவாதமிகவடங்கிமிகுந்தேமலமுமடைப்பாகி
எண்ணாதிவரையொன்றாகவிதுவுமரணமென்றறியே ௭௱௨

வேறு.

நெஞ்சினில்டைத்துவாந்திநீண்டுமுன்னடைத்துக்காட்டி
பஞ்சுபோல்நாவுழன்றுபாண்டமும்வெளுத்துக்கண்ணும்
அஞ்சவேவீக்கமட்டுமடுத்தடுததுயருமாகில்
மிஞ்சிடமலமும்நீந்துவிறக்கவேகாலம்தானே ௭௱௩

நற்சீரகத்தைவைத்தோட்டில்நயந்தேயிருந்துபுடமிட்டு
உற்றேபிடித்துத்தூள்செய்துவுறவேதிறியேழ்கொண்டு
நத்தேமணக்குநறுநெய்யில்நயந்தேயளாவில்நயந்தருந்தில்
பற்றுவயிற்றுக்கடுப்பதுவும்பறந்தேயோடுந்திண்ணமிதே ௭௱௪

சுவர்க்காசத்துக்குக்குளிகை.

இரதம்கெந்தம்வெண்காரமெண்ணுநாபிமனோசிலையும்
மருவும்தாரம்பற்படகம்வண்மைத்திப்பிலியிதுசமனாய்
ஒருமைநொச்சிகண்டங்காயோங்குமாடாதோடையிலை
பெருகுஞ்சாறேழ்நாள்வைத்தப்பின்னும் பயறளவுண்டைசெய்யே

செப்பவுண்டைதேனெய்யிற்சிறந்தசர்க்கரைதனிற்கொள்ள
அப்பதிலேயாம்வாதபித்தமானஈளையிருமல்களும்
வெய்யகுணமுமிருபதுடன்மிகுந்தசுவாதம்நாத்தைதயெல்லாம்
உப்பும்வேறேயிடமில்லாதோடிப்போகுங்கண்டாயே ௩௬

உட்குத்துக்கு.

இதாஞ்சுக்குவெண்காரமியல்சேர்கடுகுதிப்பிலியும்
சிதாஞ்சீனக்காரமுடன்சேர்ந்தமிளகுபெருங்காயம்
பதாஅரத்தைகருஞ்சீரம்பகர்கொண்டையின்பழச்சாற்
விதாவிட்டுஅரைத்தெடுத்துமிதக்கத்தூதுவளங்காய்போல் ௩௭

தூதுவிளங்காய்ப்பிரமாணந்துய்யவுண்டைதான்செய்து
மாதேயிளவெந்நீரதனில்வருந்திக்குடலிற்கதித்துவிழும்
கோதேகொடுவேலரிசியுடன்கொட்டிபிடித்துப்பிட்டாக்கி
போதேபசும்பால்தான்குடித்துப்புடமிட்டுண்ணப்போகுமே ௩௮

கையாந்தகரையிருநாழிக்கருதுங்குமரிமுந்நாழி
மைய்யாமெய்ண்ணெயையுழக்குமாவின்பாலுநால்நாழி
பெய்யாமிதாமீராறுபோதவடித்துச்சிரம்பூசி
மெய்யாய்வந்தவுட்குத்துமிக்ககாசம்வெளியாமே ௩௯

இரத்தகுன்மத்தின்குணம்.

கோபந்தரிக்குமத்தலத்தில்கேளுமேலும்புரத்தமுமாய்
ஆபந்தாதுவொன்றாகிஆகத்திரண்டுசுட்டுண்டு
தாபமாதம்தான்கோறுதலையாமழுக்குத்தான்மாறி
போதம்பிறக்குமுண்டானபுகலுங்காலுமிக்கரிதே ௪௰

காணுமுலையிற்பாலுண்டாம்கனத்தேவயிற்றில்மயிரொழுக்கம்
பேணுமுலைக்கண்தான்கறுத்துப்பிறகேவயிறுதான்வீங்கும்
தோணுமவைகளின்மரணம்சுகமாப்பிள்ளைபோலிருக்கும்
நாணும்பெரியவயித்தியர்கள்நன்றாயறிந்துசெய்குகவே ௪௰௧

செய்புநிதிகள்பத்தாலேசேரும்பிள்ளையல்லவெறும்
வையம்பிராணையாத்தகுன்மமாறும்படிக்குமருந்துசெய்ய
தூய்யபாங்கிச்சக்கையுடன்தோன்றுநாநாயன்மூலி
நெய்யிலுள்ளிதான்பொரித்துநெய்வார்த்துச்சோறுண்பீரே ௪௰௨

கடுக்காய்நெல்லிதான்றிக்காய்கனத்தமிளகுதிப்பிலியும்
முடுக்காஞ்சுக்குவிளர்வரிசிமுதிய்கொடுவேலிகொத்துமல்லி
எடுத்தசரக்குச்செவ்வியமிசைந்தகழஞ்சுமென்றாக்கி
தொடுத்தபசும்பால்வார்த்தரைத்தூத்துப்பநெய்யும்பசுப்பாலும், ()

பாலும்நெய்யுந் தான்விட்டுப்பதத்தில்வடித்துஉள்ளேதான்
காலமந்தி தினமானம்காசிடை தான்மூன்றுகொள்ள
மேலுமிரத்தகுன்மமதுமிக்கவேமாறிப்போடிவிடும்
மாலமுண்டகண்டர்திருவாணையிதுவுமுண்மையதே தூ௰௫

அறியுமிதற்குப்பத்தியங்களானகாடைகவுதாரி
வெரிமான்முயலாங்காடையுந்தான்மிக்ககுருவியிறைச்சிகளும்
கரிபூசணியின்வெள்ளரியின்கடியசிரம்துதுளங்காய்
நெரியாம்பிரண்டைசாரணையும்நீண்டகரையின்கொழுந்தானே ()

பித்தகுன்மத்தின் குணம்.

பித்தகுன்மத்தின்குணம்கேளீர்பெருக்கல்முத்திதாகமுண்டாய்
கத்தியெடுத்துப்புளித்தேப்பம்கருகாவாயும்கைப்புண்ணாய்
உற்றேவாந்தியுண்டாமேயோங்கிநெருப்புவெயில்கண்டால்
சித்தமுடனேயுடல்பொருந்திச்செய்யசிறுநீர்சிவந்திருக்கும் தூ௰௬

இருக்கப்பித்தம்குன்மமதாசிளையிருமலுண்டாமே
பெருக்கமருந்துகெந்தகமும்பேணுமிதாமரப்பொடியுஞ்
சுருக்கமுடனேகழஞ்சுகொண்டுதுய்யகுமரிச்சாறறைத்து
பருக்கப்பாகமாவாக்கிப்பையவெயிலில்வைப்பீரே தூ௰௭

வைத்தபின்புபுகையெழுப்பிவாகாப்பதமாமென்றறிந்து
உற்றேயெடுத்துவைத்துஅதைஒருநாள்சண்டில்வெருகடிகொள்
பித்தபாண்டுரூபமுடன்புளித்தேறிட்டபீலிகையும்
மத்தும்குன்மம்புரட்டிடனேமாறுஞ்சிவனார்தன்னாணை தூ௰௮

கவுசையின்குணம்

காலுடன்கையும்வற்றிக்கன்றுடன்வயிறுதானும்
மேலுடன்விளங்கிநெக்கால்வீளைந்திடும்கவுசைதானும்
மூலமாமகோதரமும்முற்றிடும்திங்கள்மூன்றில்
ஆலமாம்வியாதிசொன்னேமாளியுஞ்சங்குபோல தூ௰௯

ஆளியிற்சங்கேபோல்வடிகள்கால்தாளும்வீங்கி
நீளுடனீர்திருகிநெருங்கியேமலங்கள்சாரம்
கோளிடும்பெருவயிறுக்கொழுந்திடுமதிகளாறில்
காளினிநாட்குநாளுந்துவளையும்கண்டிடீரே தூ௨௰

உடம்பெலாம்வில்லுபோலஒக்கவேநிமிர்ந்துகொள்ளும்
தடமயில்முளைகெடாதுதன்மைபோலிருக்குமென்று
திடம்பெறுங்குணங்கள்தன்னைத்தெரிதமிழ்தன்னாலாய்ந்து
நடம்பெறுங்கவிசையானநற்குணமுரைக்கலுற்றும் தூ௨௧

காடைபுங்குநீர்ப்பூலாகடியபொன்னுவிரைவேரும்
நீடைதுடரிக்கடலாஞ்சிநிறமாஞ்சபாயவேருடனே
கூடுமிளகாயொதியன்வேர்பேருமருந்துசொல்லக்கேள்
கூடுகைப்புவசம்புள்ளிகொள்ளுமுழுவாக்களிப்பாக்கே ௩௨௨

பாக்குங்கடுக்காயசமோதம்பகருந்திப்பிலிசெவ்வள்ளி
காக்கத்தூரிசிவெண்பாடங்கருதுமதாமிலவங்கம்
ஏர்க்கமல்லியிலவங்கமேவுங்கொத்துமல்லியுமே
தாக்கவிவைகளொருமுறையாய்த்தக்களண்ணெய்காய்ச்சியிடே. ()

வேறு.

துடரிவேருமறுயலமாம்துய்யகுருவின்பச்சையின்வேர்
படருங்கிளுவைகொன்றைய துபட்டையேழுமுக்கறுக்கி
அடருஞ்சுக்குக்கைப்புடனேஆனவெம்பாடல்தன்வேரும்
மடல்சேர்நிலையில்தான்கட்டிவளர்நல்லெண்ணெய்தனிற்காய்ச்சே ௩௨௪

காய்ச்சிவடித்துஎடுத்தபின்புகளவுபார்த்துட்புண்ணதனில்
கூட்டிச்சாறேயூதிவிரால்கொடியவடுவுபுண்ணுறும்
வாய்ச்சதிரியிலூட்டியெண்ணெய்வளர்புண்ணதனில்மாறிவைக்க
பேய்ச்சிமுலையையமுதுண்ணும்பெருமாளாணைமாறிடுமே ௩௨௫

பிறவீச்சுக்கெண்ணெய்

சுக்குமிளகுதிப்பிலியுந்துய்யகருஞ்சீர்புகாசரிசி
கக்கவ்வாததைமரமஞ்சள்கடியகுப்பைசோமணதி
புக்கக்கஸ்தூரியின்மஞ்சள்பொருந்துங்கொடுவேலிவசம்புள்ளி
நக்கமுன்னேயமுக்கிறுநல்லசாரணைவேறே ௩௨௬

வேர்சேர்மிளகுகாணையின்வேர்மிக்கவுப்பைக்கிழங்கோடு
கார்சேர்தண்டையுடன்குலவுங்கரியமருந்தின்வேர்களும்
நேர்சரக்கோர்நிறையாய்நிறுத்தேகண்டுஅரைத்தெடுத்து
பார்சேர்நாழியெண்ணெயிட்டுப்பற்பமெழுகின்பதமிறக்கே ௩௨௭

இறக்கியுடலமுழுதுமெங்குமேலும்பூசியுட்கொள்ள
பறந்திடுஞ்சன்னிபுறவீச்சுபகருங்கபோசன்னியுடன்
விறந்திடுஞ்சன்னியுட்குத்துமீளாவியாதிதீருமென
மறைந்திடுமுரியமாமுனியும்வகுத்ததிதுவென்றெண்ணீரே ௩௨௮

கோஷ்டம்திப்பிலியரிதாரம்குலவுமிதாம்வெண்காரம்
மேட்டில்வளரும்கெந்தகமும்மேவுநாபிவால்விளங்கம்
காட்டில்வளருமமுக்கருவும்நல்லதான்றிமஞ்சேசிலையும்
கூட்டுமிளகுசாதிக்காய்கொடியகிராம்புவசுவாசி ௩௨௯

வாகுவலமிலவங்கமஞ் நிஷ்டிருவிகைச்சோலம்
பேசுந்திப்பிலிமூலமஞ்சள்பெருகுமிலிங்கமுடனாத்தை
கூசும்பொன்னினரிதாரங்கூறுங்கருஞ்சீர்நற்சீரம்
வாசம்பெறுநல்லுளுவாயும்வளருமோமம்வாலுளுவை ௲௰

வளருங்கார்புகரசரிமொஞ்சில்வெளுத்தபிசினுடனே
தளருமுல்லையோரண்டுசரிசேருரையிற்கழஞ்சுகொள்ளு
பளகுவாளம்கழஞ்சிரண்டுபையக்குமரிச்சாற்றாலே
அளகுபெறவேயரைத்துஞ்டையுன்பாய்த்திரட்டிக்கொள்விரே ௲௧

கொள்ளும்நொச்சியிலைச்சாறும்குத்துமறுத்தபேர்களுக்கு
மெள்ளசுக்குத்தண்ணீரில்விரும்பும்வாய்வுக்கிடுவீரே
துள்ளும்வயிறுவிரைக்கையிலேசுடுதண்ணீரில்தான்கொள்ளும்
தள்ளும்படிநீரெண்ணாதேதணியுந்திருமால்தன்னாணை ௲௨

கபோலத்துக்கெண்ணெய்.

எருக்கிலஞ்சாறுநாழிஎலுமிச்சஞ்சாறுநாழி
முருங்கைபின்பட்டைச்சாறுமுதிர்தேங்காய்ச்சாறுநாழி
விரும்புங்கிராம்புவசவாசிமேவும்வள்ளிசாதிக்காய்
சுரும்புமேலமிலவங்கந்துய்யநற்சீர்மோதகமாம் ௲௩

துய்யமதூரந்திப்பிலிமூலம்தொகுத்தஅமுக்கறாதிப்பிலியும்
செய்யுஞ்சாறுகொண்டதிலேநாழியெண்ணெய்தான்விட்டு
பையக்கரைத்துவடித்தெடுத்துப்பகருஞ்சிரசிற்பூசுவீரால்
மைப்புரியுங்குழலாரேமாறுங்கபோலநோக்காடே ௲௪

அதிபில்லியின்குணம்.

ஊண்டவடிக்கும்பல்லடியாமுதிரஞ்சாய்க்கும்குணம்கண்டால்
தான்றிக்காயும்கர்க்கடகம்தக்கவுள்ளிபெருங்காயம்
தோண்டியரைத்துவேப்பெண்ணெயில் சுறுக்காய்க்கொடுப்பீருள்ளுக்கு
காண்டநாரத்தையிலையதனைக்காடியுதனில்வேதுஇடே ௲௫

வயிற்றுவலியின்குணம்

வயிறுபிடுங்கும்வலியெடுக்கும்வந்தேபிரத்தந்தான்சொரியும்
வயிறுபொருமும்கீழ்வயிறுவாகாய்த்தொப்புள்தான்வீங்கும்
வயிறுநொந்தேஏமிக்குமருந்துகிராம்புபெருங்காயம்
வயிறுசுக்குவுள்ளிசுட்டுவாகாயரைத்துத்தேங்காய்ப்பால் ௲௬

தேங்காய்ப்பாலினுட்கொள்ளத்தீரும்காட்டேவல்பில்லி
பாங்காகணக்கும்புளிமயிரும்பகருமூஞ்சூர்மாட்டுக்குழம்பு
தாங்காமல்மில்புகைகாட்டசற்றுமானைப்புகையில்விட
நீங்காவியாதியெல்லாந்தானில்லாதோடுமோடிடுமே ௲௭

மண்டைப்பில்லியின்குணம்

மண்டைகாதுவலியெடுக்கும்வாகாய்க்காதிலெழுச்சியுண்டாம்
பண்டுசீழும்விழுந்துமங்கேபகர்மாங்கிஷமும்புறப்பட்டு
கண்டோம்கோழிக்குஞ்சதுபோல்காதினாலேபுறப்பட்டு
அண்டுசொன்னோம்விழுமென்றுஅடுத்துமருந்துஉரைத்தோமே ௲௨௮

உரைத்தாரஞ்சுளெண்ணெயிடவுற்றதிறமாயெண்ணெயது
பெருத்தகாயங்கெந்தகமும்பேணுங்காரநேர்வாளம்
வருத்தக்கானஅரிதாரம்வசம்புஅதுவும்பச்சிலையும்
திருத்தும்வேம்பின்பிசின்கூட்டிச்சேரஅரையிர்திடனாக ௲௨௯

சேரும்வெள்ளாட்டினுடையசிறுங்கோமயம்தில்லம்பால்
காரும்வெடியினுப்புடனேகருதிக்கூட்டிப்பதத்தெரித்து
சீருஞ்சிரசில்தான்வைத்துச்செய்யகாதினுள்விட்டு
பாருநாலுநாள்தானும்பதமாய்ப்பண்ணிக்கொள்ளீரே ௲௩௰

நடைப்பில்லியின்குணம்.

பிடரிநோவுந்தலைவலிக்கும்பின்னும்வயிறுதான்பொருமும்
நடைசேர்பில்லிக்குணந்தாக்குநாடுமருந்துநீகேளாய்
கொடிசேர்சிந்திற்கிழங்குடனேகூறுமுள்ளிபெருங்காயம்
வடிசேருடனேதான்றிக்காய்வலம்புரிக்காய்நல்லவித்து ௲௩௧

அரைத்துக்கரைத்துப்பசுப்பாலில்அன்பாயேழுநாள்குடியு
முரத்தகோழிமயிருடனேயுவந்துஅட்டையிற்கோதுந்
திருந்தமாகப்புனக்காட்டத்தீராநடையின்பில்லியது
வருத்தமாகவோடிவிடுமாயோனாணையுண்மையிதே ௲௩௨

காய்ச்சல்விக்கக்குடிநீர்

நீரின்முள்ளித்தண்டுடனேநீண்டயிலையுமொருபிடியாய்
பாருங்கடுக்காய்மிளகோடுபார்க்குங்கருப்புக்கட்டுமுடன்
சீரதுபெற்றவேயுரைப்பலங்கேள்செய்யசுக்கதோர்பிடியாங்
காறுங்கள்ளிநாலொன்றாய்க்காய்ச்சிப்பருகநலமாமே ௲௩௩

மூலக்கடுப்புக்கழிச்சலுக்கு

சாதிக்காய்கிராம்புவசுவாசிதருவேற்கொம்புமிளகோடு
நீதிகடுக்காயயமோர்தந்திறமாந்திப்பிலிநற்சீர
மீதுவெல்லாமொருநிறைகொண்டிடித்துச்சீலைவடிகட்டி
கோதுகரண்டைகானிடித்துக்கூட்டிப்பற்பமொன்றுக்கே ௲௩௪

கூட்டிப்பற்பந்தன்னையேதான்கொள்ளுந்தேனில்தன்னிலேதான்
மீட்டுமருந்துஅதுகொள்ளில்வென்றுவெருகடியளவாமே
நாட்டுமூலக்கடுப்புடனேநல்லகருத்திலிவைமாறுந்
நீட்டுஞ்சிவனார்தன்னாணைதிண்ணமிதுதான்செப்பினோமே ௲௩௫

மூலவாயுக்கழிச்சலுக்கு.

மூலவாயுக்கழிச்சலுக்குமுந்தும்கிராம்புவசுவாசி
தாலம்விழுதுமதிவிடயஞ்சாதிக்காய்நற்சீரகமும்
கோலவத்திதிப்பிலியும்குணமாம்கஞ்சாஅபின்மருந்து
சீலம்பெறவேயோரிரண்டுசேரும்கழஞ்சிஒன்றுமே ௲௪௬

ஒன்றுயெடுத்துஇளம்பதமாயொட்டிவறுத்துப்பொடிபண்ணி
நன்றும்வெருகின்பிடியளவுநாளேதின்றுவருவீரால்
கொன்றுவதைக்கும்குடல்வாதம்கொதித்துமிகவேதான்வாங்கும்
மண்ணோரறியமூலவாயுவளரும்கழிச்சல்மாறிடுமே ௲௪௭

சர்வகுன்மத்துக்கும்குடல் புரட்டிவலிக்கிற குன்மத்துக்குஞ்சாரபற்பம்.

மானேசர்வகுன்மத்துக்குவளருமிரதம்பலம்பத்து
தேனேமனோசிலைபலமைந்துசெய்யலிங்கம்பலம்நாலு
தானேகெந்தகம்பலமாறுதயவாய்நாபிபலமெட்டு
கானேயப்பிரம்பலம்பத்துக்கருதுமதுரம்பலமாறே ௲௪௮

ஆறும்துரிசிபலமஞ்சுஅடுத்தபொற்றலையான்தகரை
நாறுஞ்சாறைவார்த்தரைத்துநாலுநாளும்வார்த்தரைத்து
பீறுஞ்செம்புவட்டினிற்பூசிப்பீடகத்தீயில்வேகவைத்து
கூறும்பற்பமஞ்சாகக்கொள்ளுமிரதம்பலமஞ்சே ௲௪௯

பதமாம்கூகைநீருடனேபகரும்பலந்தானெட்டுடனே
இதமாமீயம்பலமஞ்சுஇன்னம்காரீயம்பலமஞ்சு
சுதமாம்காந்தம்பலமஞ்சுதக்கஆலம்வேர்நறுக்கி
கதமாம்குழிக்கல்லிலரைத்துக்கனத்தசெம்புவட்டில்பூசே ௲௫௰

பூசும்படிக்குவைத்துத்தின்னும்புகழுமிஞ்சிச்சாந்திடவும்
வீசும்நறுநெய்தனிற்கொள்ளமிகுந்தவலிக்குப்பற்பமாய்க்கொள்
பாசுமிகுந்தபித்தமுதல்பாண்டுகிராணிவலிவாயு
நீசுமிந்தப்பற்பமதைநின்றுபொறுக்கதின்பீரே ௲௫௧

தின்பீரந்தப்பற்பமதைத்தின்றுவாண்டால்நெய்வடிக்க
முன்றேகுவளைபாதிரிமுன்னைமுகரும்பெருவாகை
அன்பாஞ்சிறியவழுதலைவேரானநெருஞ்சிமாவிலிங்கு
நன்பாம்பேர்மல்லிசிற்றமல்லிநல்லகொடுவேலிவேர்தேடே ௲௫௨

தேடும்கோஷ்டம்திப்பிலியும்தெளிந்தஇந்துதன்னுடனே
கூடுமந்திதிப்பிலியும்கொள்ளுமுழுவாச்சதகுப்பை
போடும்வெட்பால்விளாவரிசிபுதியவச்சாரம்துருசியும்தான்
நாடும்கிராம்புசாதிக்காய்நல்லஅரத்தையினுடனே ௲௫௩

நல்லமாஞ்சில்நாகப்பூநலமாய்க்கழஞ்சுநெய்குறுணி
நல்லபசும்பால்முக்குறுணியுகப்பாய்பாலிலேயரைத்து
அல்லலறவேநெய்யிட்டுஅழகாய்வடித்துநெய்யருந்த
இல்லம்பற்பம்நெய்தின்றுவிதமாய்நோய்கள்தான்போமே ௬௱௪

குமட்டிக்காயெண்ணெய்

செவ்வள்ளிகரந்தம்கொத்துமல்லிசேர்ந்தகன்னார்க்கடகம்
கொவ்வையிதழாயமுக்குறுசூறும்கருஞ்சீரகவியுடன்
கவ்வைமோரிலிருவிதனைக்கருஞ்சீரகமும்வேகவைத்து
வெவ்வேறரைத்துகேர்வாளமிகவேசுத்திபண்ணீரே ௬௱௫

பண்ணும்வாளம்கழஞ்சியதுபதினெட்டாகக்கொண்டதுவும்
எண்ணும்கொம்மட்டிக்காயதனையிரண்டாய்வெட்டிக்கொண்டபின்பு
நண்ணும்பெரியகொடிக்கள்ளிநல்லபட்டையுடன்போட்டு
திண்ணமாகவேயவித்துச்செய்வாயாமணக்கெண்ணெயிடே ௬௱௬

எடுத்தவெண்ணெயிதுவிட்டுஇதுவும்குழப்பிப்பதமாக்கி
தொடுத்தவெண்ணெய்கழஞ்சியதுசுகமாய்வெந்நீர் தான்கொள்ள
பொடித்தகுன்மம்பதினெட்டும்போகவாயுவும்விட்டகலும்
படித்தசிவனார்தன்னாணைபகரும்குன்மம்கூடிருமே ௬௱௭

சத்திக்கு.

கொட்டான்பழமுமாறுநெய்யும்கொள்ளும்துரிசுதேசிப்பழமும்
மட்டாகவேயொன்றாக்கிவருந்திக்கொடுக்கச்சத்திபண்ணும்
முட்டாள்வாதச்சிலேட்டுமமுமுறிந்துஓடுஞ்சிவனாணை
பொட்டாரகணீரெண்ணாதேபொருந்துஞ்சத்தியெடுபடுமே. ௬௱௮

பெரும் பாட்டுக்கு.

ஆலம்கொழுந்துமதன்விழுதுமானபூவுமதன்வேரும்
கோலாவரையின்வேர்ப்பட்டைகுணமாம்பசும்பால்தனிற்கொடுக்க
ஆலம்புகழும்பெரும்பாடுமழுவியுகன்றுமாறிவிடும்
காலன்வந்து தான்முடுகான்கருது மருந்துஇதுவாமே ௬௱௯

குமட்டிக் காய்க்கடுகு

கும்மட்டிக்காயிருபதுதான்கொண்டுவந்துவைக்கலிலே
செம்மையாகக்கட்டியதைத்திரும்பச்சுட்டெண்டுபத
மூண்மையாகச்சாற்கொண்டுவுதவும்குழம்புபதம்காய்ச்சி
நண்ணும்விடயமிளகுசுக்குநல்லகடுக்காய்திப்பிலியே ௬௱௰

கடியதான்றிநெல்விமுள்ளிகனத்தகாயமிந்துப்பு
வெடியுப்புடனேசூவளையுமேவும்விழாவுசவர்க்காரம்
துடிசேர்கடுகுரோசணையுஞ்சொல்லுமுப்புக்கல்லுப்பு
பொடிசேருப்புவெண்காரம்பொருந்துஞ்சீனக்காரமுமே ௬௱௰௧

சீனக்காரநவச்சாரஞ்செய்பளவச்சார்கருஞ்சீரம்
தேனேநற்சீரயமோதஞ்செய்யகடுகுவிராகனைட

தானேமூன்றுவிராகனெடை தக்கசுக்குவிளாவிரையும்
ஊனேயிந்தக்கியாழத்திலுக்கத்தூவிவிளக்கெண்ணெய்   ௲௬
கொள்ளேயசனம்தான்செரிக்கும்கூட்டும்பக்கச்சூலையும்போம்
அள்ளேவயிற்றுச்சூலையுடனரோசிகமாஞ்சூலையுடன்
பிள்ளேபிரமும்பீனிசமும்பெரிபவாதமகோதரமும்
தள்ளேகிராணிசூச்சிகளும்தககசூலைரோகமும்போம்   ௲௭

நாரத்தங்காய்க்கடுகு.

வில்லைநெரிஞ்சிசிற்றாமுட்டிமேவுஞ்சாரணைவேருடனே
கல்லகடுக்காய்பழயசிட்டம்நாடும்காட்டாமணக்குடன்வேர்
இல்லம்காட்டுக்கரணையுடனிருப்புச்சல்லிபலமிரண்டும்
சொல்லும்காடிக்கோமயமுஞ்சொகுசாமோரும்தண்ணீரே   ௲௮

தண்ணீரிதுகளெண்ணாழிதானேயிந்தமருந்துகளை
சொன்னேயிடித்துஅதில்போட்டுச்சுருங்கக்குறுணியாய்க்காய்ச்சி
மின்னேவடித்துஅதிற்பத்துமேவுநார்த்தம்பிசபுளியம்
அன்னேயுஞ்சிபலம்பத்துஆனஇந்துப்புப்பலம்பத்தே   ௲௯

பத்தேயிந்தமருந்துதன்னைப்பகாக்கியாழமாய்க்காய்ச்சி
உற்றேபயித்தியம்வந்தவர்க்குவுடனேநறுநெய்படியிரண்டு
சிற்றாமணக்குஎண்ணெய்படிசேரவொன்றுகூடவிட்டு
மெத்தமோதம்பெருங்காயமேவுஞ்சாதிக்காயுடனே   ௲௰

மஞ்சம்திகழும்கடைமருந்துவராகனிடைதான் ரண்டுகொண்டு
மிஞ்சிவறுத்துப்பொடிபண்ணிமேவுஞ்சிட்டம்பலமூன்று
அஞ்சாக்கோமூத்திரமதனில்சுறுக்காய்மூன்றுநாள்போட்டு
அஞ்சவெண்டாமரைப்பொடிதானுன்பலந்தான்மூன்றுகொள்ளே.   ௲௰௧

ஆனபுளியினிலைச்சாற்றிலன்பாய்ப்பத்துதரம்வறுத்து
மானேனகையாந்தகரைச்சாற்வார்த்தேயரைத்துமூன்றுதரம்
தேனேயடுப்பிலேமூட்டிச்சிறுகவசம்புபுடமிட்டு
தானேபிண்டப்பொடிபண்ணித்தக்கியாழத்தினில்தூவி   ௲௰௨

தக்கபதத்திலேயிறக்கித்தான்றிக்காயினளவாக
ஒக்கஅந்திசந்திகொள்ளுமோடும்வியாதிதனைக்கேளும்
பக்கச்சூலைவாயுவெட்டும்பருஞ்சோகைபாண்டுவிதம்
மிக்கசீதக்கட்டுடனேவிகாரமிதுகளெல்லாம்தீரும்   ௲௰௩

வெப்புப்பார்வைக்கு.

சுக்குப்பக்துப்பலம்கொள்ளும்தூய்யமிளகுபலமூன்று
ஒக்கக்கடுகுபலமூன்றுஓமந்தானும்பலமூன்று
மிக்கமுள்ளிபிருபதுமாமேவுங்காயம்பலமொன்று
தக்ககருஞ்சீரபலமரைக்கால்சரியாபோட்டில்வறுத்துளடே   ௲௰௪

றைக்குஞ்சரக்குகளெல்லாம்தான்வளருங்காயம்தன்னைவிடச்
சுறுக்காகப்பொடிபண்ணித்தாபபனையிற்கட்டியது

நிறுக்கும்பலந்தான்மூன்றுகொண்டுநேராத்தீர்த்துவடன்போட்டு
பெறுங்குங்காயங்குறிக்கியிட்டுப்பிறகுவூன்றிற்றுக்கியிடே ௲௭௰
உள்ளிற்றுக்கியிட்டபின்புவுடனேயெள்ளிலெண்ணெயிட்டு
மெள்ளச்சட்டிதனிற்போட்டு விரும்பிச்சலநீர்தான்காய்ச்சி
துள்ளும்நெருப்பில்வேகவைத்துச் சுறுக்காய்க்காய்ந்தாறினபின்
கொள்ளும்வெருகடிப்பிரமாணம் கூட்டும்பத்துநாளைக்கே ௲௭௧
பத்துநாளைக்குள்ளாகப்பாரவயிறுதான்கழியும்
நித்தம்பிடித்தநயல்மாறி நிறமுமிகுந்துபிலனுண்டாம்
மத்துமுடலில்பலவணியும் மாறும்வென்னீர்தான்குடியும்
கத்தைச்சடையோன்தன்னாணை கருதுமருந்துயிதுவாமே ௲௭௨

சோபத்துக்குஞ்சுரத்துக்கும்விஷபாகத்துக்கும்

வட்டத்திருப்பிக்குறிஞ்சான்வேற் வளருஞ்சிறுகாஞ்சோரியின்வேர்
கட்டைக்காந்தைவிடவேரும் காவட்டப்புல்லுங்காவளைவேர்
துட்டப்புங்கும்வேர்ப்பட்டை தூடருமுருக்கைப்பட்டையுடன்
இட்டகொன்றைப்பட்டையுடனிசைந்துபாவட்டம்வேர்தேடே ௲௭௩
தேடேவேப்பமிலைதண்டுசெய்யம்பிரண்டைத்தண்டுடனே
நாடாப்பாதிரிப்பட்டை நாய்வேளைவேற்கூவிளைவேர்
கூடாய்மணலில்சலமுமாய் குவளைவேரும்பிண்டித்தண்டும்
ஈடாமாமலைத்தண்டுகளும் இலையுங்கோவைத்தண்டுடனே ௲௭௪
கோவேபூசனியின்தண்டுகொள்ளுஞ்சுணையின்தண்டுடனே
நாமேசொன்னேங்கற்றாழை நார்த்தையிலைகிழ்நெல்லிமூலம்
போமேநீரின்முள்ளியிலை புகழுமல்லியிலையுடனே
தாமேகொட்டைப்பாசியுடன் தருமாந்துத்தஞ்சாறுமெரி ௲௭௫
எரியாறுவதுதனிலே யேத்தேயணைத்துக்கடைமருந்து
கரியசீரம்நற்சீரங்கடியஅரத்தைசதகுப்பை
அரியதிப்பிலிதேவதாரமானமண்திஷ்டிவசம்புள்ளி
தெரியுங்கோஷ்டமரமஞ்சள்செவ்வியமதுரம்சிறுபூலம் ௲௭௬
மதுரமானஎண்ணைக்குவகையாஞ்சாரக்குஒவ்வொன்று
அதிகமாகக்களஞ்சியெட்டுஆனசத்திச்சாரணையும்
பதிசேர்மூசாசித்தாமட்டி பகர்நன்னாரிசாரணைவேர்
புதியவுதகம்காணிபுகழ்வட்டத்திருப்பியின்வேரே ௲௭௭
வட்டக்கொழுஞ்சிமுட்டியின்வேர் வழகுபீலிக்கிழ்க்காயும்
இட்டவேர்கள்வகைகழஞ்சி இதுவுமரைத்துத்தான்கரைத்து
பொட்டபெருவியன்தனசாசம் பொன்னேமெழுகுபலமிரண்டு
இட்டுக்காய்ச்சிவடித்தெடுத்து பிந்தக்கியாழுந்தனிக்கலவேன் ௲௭௮
கடியபுள்ளிநற்சீரம் கருதுமோதந்திப்பிலியும்
துடிசேர்மிளகுகற்பூராந்துய்யசாரக்குஒருநிறையாய்
படிகொள்தண்ணீர்தான்வார்த்துப் பகரக்கேளுநாளொன்றாய்
விடிவோந்திக்குடிப்பிராய்விக்கமகோதரம்விட்டோடும் ௲௭௯

காமாலைக்கு.

கண்டங்கனக்குந்தலைநோகுங் கனத்தபிளேப்புமுண்டாகும்
பண்டேவ்தனம்தித்திக்கும் பகருங்கடுக்காயிருபதுகொள்
மெண்டேகாந்தம்பலமூன்றுஞ் செய்யகிட்டம்பலமிரண்டு
விண்டேமனைப்பொடிப்பலமூன்று மேவுநீலம்பலமஞ்சே ௲௮௰

இதுவுமது.

நிலஞ்சேர் தான்றிக்கருஞ்சீரம்நேராய்ஆறுகாசிடைகொள்
கலந்தேமதுரம்காசிடைதான் கருதும்புளியிணிலைச்சாறும்
பலந்தானுடையகுப்பைமேனி பருகும்கையான்தகரையுடன்
தலந்தான்புகழுமெவ்வொன்று சாறுமுன்னுழிதான்கூட்டே ௲௮௧

வெள்ளைக்குளண்ணை.

அவனியில்மாந்தருக்குஅரிவையர்போகத்தாலே
தவமுறுமேகவெள்ளை தனித்துடலூறுமாகில்
பவமுறுமருந்துசொல்வேன் பாவையேயறையக்கேளும்
கவறுசித்தாமணக்குக்கணக்குடன்படியாமொன்றே ௲௮௨
ஒன்றுவேளாருகுதானும் ஓசைப்படிதான்சேரு
நன்றுடன்தேங்காய்ப்பாலு நாழிமுக்காலதாக
தன்றுடன்புங்கம்பாலுந் தனிப்படியரையதாக
வன்றுவல்லாதிதானும்வகையரைப்படிதான்சேரே ௲௮௩
சேர்த்துமேபிரமிதானும் சீருடனரையதாக
பார்த்துவெள்ளாட்டுப்பாலும் படியரைவீதமாக
வார்த்துமேபசும்பால்தானும் வகைக்கரைப்படியதாக
நார்த்துமேமொன்றாய்சேர்த்து நாலுநாள்வூறவையே ௲௮௪
ஊறியேவைத்தபின்புவுறுதியாமடுப்பிலேற்றி
ஆறவேதீயைமூட்டி அரும்பதமெழுகதாக்கி
தேறவேபூரந்தானுந் திகழ்நாலுவராகனுகை
கூறவேசொன்னேமிந்த குவலயந்தன்னுக்குள்ளே ௲௮௫
உலகுளோர்க்கிந்தநூலை யுறுதியாய்நாமுரைத்தோம்
அலகிலாசாத்திரங்கள் யாவற்றுந்திரட்டியொன்றாய்
நலம்பெறமாந்தருக்கு நன்மைபுண்டாகவேதான்
சலம்பொலிற்பூவின்தன்னைச்சாற்றினேமானிடர்க்கே ௲௮௬
இந்தநூல்படித்துவியாதிஇதன்படிசிகிட்சைசெய்தால்
வந்தநோயெலாமகன்று வருந்திடும்மேமன்திண்டான்
முந்தவேமுறைகளெல்லா முறைப்படிசெய்துகொண்டு
எந்தகாலந்தந்தானு மியல்பெறவாழலாமே ௲௮௭
சொன்னேமாயிரத்திருநூறுந் தோற்றுநூடியொருநூறும்
அன்னேபிண்டவுற்பத்தியானுருமைக்குவுரைத்ததுவும்
முன்னேவடநூல்தனையாய்ந்து மொழிந்தாதன்வந்திரியானும்
பன்னேமாந்தர்க்குறுதியுடன் பகர்ந்தாரிந்நூல்முடிவாமே ௲௮௮

தன்வந்திரிவயித்தியசிந்தாமணி நூஉா—முற்றிற்று.